வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 | Reg. No. : P . 1632 | விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 25.04.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 137 | பக்கங்கள் : 16




# வடக்கு - கிழக்கில் இன்று ஹர்த்தால்

- முஸ்லிம் மக்களும் முழு ஆதரவு
- பாடசாலைகளும் இன்று இயங்காது
- போக்குவரத்து சேவைகளும் இயங்காது
- நீதிமன்ற நடவடிக்கைகளும் பாதிக்கும்!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 25

**தமிழ் பேசும் மக்களின் தாயகமான வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இன்று செவ்வாய்க்கிழமை பூரண ஹர்த்தால் கடைப்பிடிக்கப்படவுள்ளது.**

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை இரத்து செய்யக் கோரியும் தமிழர் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட ஆக்கிரமிப்புகள் - தமிழரின் மரபுரிமைகளை சிங்கள - பௌத்த மயமாக்கல் - அழித்தல் என்பவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் 7 தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டாக இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), 15



## பிரபல எழுத்தாளர் ஐ. சண்முகன் காலமானார்!

யாழ்ப்பாணம், ஏப். 25

ஈழத்தின் புகழ்பூத்த எழுத்தாளர்களில் ஒருவரான குப்பிழான் ஐ. சண்முகன் என்ற புனைபெயரில் அறியப்பட்ட ஐயாத்துரை சண்முகலிங்கம் (வயது 77) நேற்று திங்கட்கிழமை காலமானார்.

பாடசாலை ஆசிரியரான இவர் "கோடுகளும் கோலங்களும்", "சாதாரணங்களும் அசாதாரணங்களும்", "உதிரிகளும்" உட்பட ஐந்து சிறுகதை தொகுதிகள், பிரபஞ்ச சுருதி என்ற கவிதை நூல் தொகுதியையும் 15

## ஹர்த்தாலை ஒட்டி படைகள் குவிப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 25

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந்த நிலையில், இரு மாகாணங்களிலும் முக்கிய நகரப் பகுதிகள், வீதிச் சந்திகள் என்பவற்றில் ஆயுதம் ஏந்திய படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

வன்முறைகள் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டே இந்தப் பாதுகாப்பு ஏற்பாடு முன்னெடுக்கப்படுவதாக பாதுகாப்பு தரப்பு தெரிவித்துள்ளது.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கு எதிராகவும் தமிழர் பகுதிகளில் நடைபெறும் திட்டமிட்ட ஆக்கிரமிப்புகள் - மரபுரிமைகள் அழிப்புக்கு எதிராகவும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இன்று ஹர்த்தால் கடைப்பிடிக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐ. எம். எவ். உடன்பாட்டை காட்டி சூது விளையாட்டில் அரசாங்கம்!

### ஐக்கிய மக்கள் சக்தி ஆதரிக்காதாம்

கொழும்பு, ஏப். 25



சர்வதேச நாணய நிதியத்துடனான (ஐ. எம். எவ்.) இணக்கப்பாடு என்ற போர்வையில் தேசிய சொத்துக்களை தனியார் துறையினருக்கு தாரை வார்க் 15

## தமிழ் எம். பிக்கள் இன்று பாராளுமன்றில் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஏப். 25

பாராளுமன்றத்தில் இன்றைய தினம் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இந்தப் போராட்டத்துக்கு மலையக, முஸ்லிம் மற்றும் எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஏனைய எதிர்க் கட் சிகளும் ஆதரவளிக்கும் 15

### பயங்கரவாத எதிர்ப்பு சட்டம்

## பாராளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப்பட மாட்டாது!

கொழும்பு, ஏப். 25

பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் திட்டமிட்டபடி இன்றைய தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட மாட்டாது என்று அறிய வருகின்றது.

தற்போது நடைமுறையிலிருக்கும் பயங்கரவாத தடை சட்டத்துக்கு பதிலாக பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் அறிமுகப்படுத்தப்பட இருந்தது. இதன் உத்தேச சட்டம் கடந்த மார்ச் 23ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. 15

## அரசாங்கத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகள் இணைவு!

### கஜேந்திரகுமாரும் பங்கேற்பு

கொழும்பு, ஏப். 25

அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் ஜனநாயக விரோத செயல்களுக்கு எதிராக ஒன்றிணைந்து பெரும் சக்தியாக செயல்பட எதிர்க்கட்சிகள் இணங்கியுள்ளன.

அரசாங்கத்திலிருந்து பிரிந்து எதி 15



## குருதி வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு!

யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ்ப்பாணத்தில் சகல வகையான குருதி வகைகளுக்கும் கடும் தட்டுப்பாடு நிலவுகிறது என்று யாழ்ப்பாணம், தெல்லிப்பழை மருத்துவமனைகளின் இரத்த வங்கிகள் தெரிவித்தன.

இரத்தத்துக்கான தேவை வடக்கு மாகாணத்தில் அதிகரித்த நிலையில் இருக்கிறது. 15

## புதிய சட்டமூலத்தை கூட்டாக எதிர்ப்போம்!

### லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி

கொழும்பு, ஏப். 25

உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை கூட்டாக எதிர்ப்பதென எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் 15

## வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் வழிபாட்டை அதிகாரிகள் தடுக்க முடியாது!

### வவுனியா நீதிமன்றம் உத்தரவு

வவுனியா, ஏப். 25

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தின் வழிபாட்டுக்கும் பூசைகளுக்கும் எந்தவோர் அரச அதிகாரிகளும் தடைவிதிக்க முடியாது என வவுனியா மாவட்ட நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டது.

எனினும், உடைக்கப்பட்ட விக்கிரகங்களை இப்போது வைக்க முடியாது என்று கூறிய நீதிபதி, அடுத்த தவணையில் அது பற்றி ஆராய்ந்து கட்டளை பிறப்பிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

தொல்லியல் 15

### நெடுந்தீவு ஐவர் கொலை;

## கொலைக்கு பயன்படுத்திய கத்தி கிணற்றிலிருந்து மீட்பு!

யாழ்ப்பாணம், ஏப். 25

நெடுந்தீவில் வயோதிபர்கள் ஐவரை வெட்டிக் கொலை செய்வதற்கு பயன்படுத்திய கத்தி, கொலையின்போது சந்தேக நபர் அணிந்திருந்த சாரம் என்பன வீட்டின் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டன. கொலைச் சந்தேகநபர் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே இவை மீட்கப்பட்டன.

நீதிமன்ற அனுமதியின் பிரகாரம் 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

ஏழு தமிழ்த் தேசியக் கட்சிகளின் அழைப்பின்பேரில் இன்று வடக்கு - கிழக்கு தழுவிய ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது.

வடக்கு - கிழக்கு தழுவிய போராட்டம் என்றாலும்கூட கிழக்கில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் மட்டும் இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படலாம்.

ஏழு தமிழ்த் தேசியக் கட்சிகள் இதற்கு கூட்டாக அழைப்பு விடுத்திருந்தாலும், தமிழ் தேசியக் கூட்டமைப்பே இதற்கான ஆரம்பப் பணிகளைத் தொடங்கியது.

போராட்டம் தொடர்பாக ஆராய்வதற்காக அவர்கள் கூட்டியிருந்த கூட்டத்தில், தமிழரசு கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா, மற்றும் விக்னேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொண்டு ஆதரவு தெரிவித்தமையைத் தொடர்ந்து இதற்கு முக்கியத்துவம் அதிகமானது.

இப்போது பல்வேறு தரப்பினரும் இந்தப் போராட்டத்துக்கு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

நேற்று இந்த ஊர்க்குருவிக்கு, "வட்ஸ்அப்" செயலி மூலம் ஒரு குரல் பதிவு ஒன்றை அன்பர் ஒருவர் அனுப்பியிருந்தார்.

எடுத்த எடுப்பிலேயே அந்த அன்பர் கேட்டிருந்தார், "இன்று நடக்கவிருக்கும் இந்த கதவடைப்பு, தமிழர்களின் தேசிய இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்காகவா? இல்லைத்தானே?! அது இப்போது இருக்கும் ஒருசில பிரச்னைகளுக்காகத் தானே? ஆனால், இதுபோன்ற பிரச்னைகளைப் பாராளுமன்றத்தில் எடுத்துச் சொல்லி அவற்றுக்கு தீர்வு காணுவார்கள் என்பதற்காகத்தானே நாங்கள் எங்கள் பிரதிநிதிகளை பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைக்கின்றோம். இன்று தமிழர் தாயகத்தில் பதினெட்டு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களில் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கும் ஐவரையும் விட்டாலும், ஏனைய பதின்மூன்று பேர் பாராளுமன்றில் இருக்கிறார்கள். அவர்கள் நாம் தற்போது எதிர்கொள்ளும் இந்த பிரச்னைகளைப் பாராளுமன்றத்திலோ, துறைசார் அமைச்சரிடமோ, பிரதமரிடமோ அல்லது ஜனாதிபதியிடம் தனிப்பட்ட வகையிலோ பேசி அல்லவா அவற்றுக்கு தீர்வு காண வேண்டும். அவர்களுக்கான பணியும் அதுதானே. அது அவர்களுடைய பொறுப்புத்தானே. தமது பொறுப்பைத் தட்டிக்கழித்துவிட்டு, இவ்வாறு கதவடைப்பு செய்து மக்களை மேலும் வருத்துவதால் என்ன பலனை மக்களுக்கு கொண்டுவரப் போகிறார்கள்?".

அவர் பலதரப்பட்டவர்களுடனும் தொடர்பில் இருக்கும் ஓர் அன்பர். பொதுவான மக்கள் அபிப்பிராயத்தை பிரதிபலிக்கின்றவர். அவரின் பேச்சிலும் குரலிலும் ஒருவகை கோபம் இருப்பதை அவதானிக்க முடிந்தது. மக்களிடத்திலும் அதே அளவு கோபம் இருக்கக்கூடும்.

அவர் தெரிவித்த அந்தக் கருத்துத் தொடர்பாக இந்த ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்துள்ள கட்சி ஒன்றின் தலைவருடன் பேசினேன்.

அவர் சொன்னார், "பாராளுமன்றத்தில் நாங்கள் பேசத் தொடங்கினாலே சபா மண்டபத்தில் இருக்கின்ற மற்றைய எம்.பிக்கள் எழுந்து சென்றுவிடுகின்றார்கள். அமைச்சர்கள், ஜனாதிபதியுடன் பேசி இதற்கு எங்களால் தீர்வு கொண்டுவர முடியும் என்றால் செய்திருக்கமாட்டோமா? அரசாங்கத்துடன் இணைந்து இயங்குகின்றவர்கள், அமைச்சர்களாலேயே செய்யமுடியாமல் இருக்கின்றது. எங்களால் முடிந்தது இந்த விவகாரத்தில் தமிழ் மக்களின் உணர்வுகளை வெளிக்கொண்டு வருவதுதான். அரசின் இந்த கலாசார படுகொலைக்கு எதிராக எங்கள் மக்களின் ஒட்டுமொத்த உணர்வை வெளியே கொண்டுவரவேண்டியது எமது கடமைதானே", என்றார்.

அவர்கள் பாராளுமன்றத்துக்கு எங்களை அனுப்புங்கள் இவற்றையெல்லாம் தடுக்கின்றோம் என்று வாக்குறுதி தந்து வாக்குக் கேட்டவர்கள் அல்ல. அவர்கள் பாராளுமன்றம் செல்வது தாங்கள்தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற அங்கீகாரத்தை பெறுவதற்காகவே. அப்படி அவர்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்பதால்தான் அரசாங்கமோ அல்லது சர்வதேச சமூகமோ அவர்களுடன்பேசும். பேசுகிறது. அப்போது நாம் எதிர்கொள்ளும் இதுபோன்ற விடயங்களை அவர்களின் கவனத்துக்கு கொண்டுவர முடியும்.

அந்தத் தலைவர் தொடர்பை துண்டிப்பதற்கு முன்னர் சொன்னார், "எங்கள் நிலைமை இப்படித்தான். பேசாமல் இருந்தால் பேசாமல் இருக்கின்றார்கள் என்பார்கள். எமது எதிர்ப்பை ஒற்றுமையாக வெளிக்கொண்டுவருவோம் என்றால் ஏன் எதிர்ப்பைக் காட்டுகிறீர்கள் என்பார்கள்"!

இருந்தாலும், இந்தப் பத்தியில் முன்னர் ஒரு தடவை சொன்னதுபோல, போராட்டம் என்றால் அது ஆயிரக்கணக்கானவர்களைத் திரட்டி, மிகப் பெரும் முற்றுகையை ஏற்படுத்தி அரச இயந்திரங்களை ஸ்தம்பிதம் அடையச் செய்யவேண்டும். அது எந்தப் பிரச்னைக்காக நடத்தப்படுகின்றதோ அந்தப் பிரச்னைக்கு தீர்வுகாணும்வரை தொடரப்படவும் வேண்டும். அப்படியொரு போராட்டத்தை நடத்தக்கூடிய மனவிருப்பும் ஆற்றலும் மக்களைத் திரட்டக் கூடிய வல்லமையும் உள்ள அரசியல் தலைமை என்பது நம்மிடம் இல்லை! அதுவே இப்போது தேவையும்கூட.

- ஊர்க்குருவி

# பொது முடக்கப் போராட்டத்துக்கு சகல தரப்பினரும் ஆதரவளியுங்கள்

## சிறீதரன் எம். பி. கோரிக்கை

கிளிநொச்சி, ஏப். 25

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கைவிட வேண்டும், வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்படும் சிங்கள - பௌத்த மயமாக்கலை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்னும் கோரிக்கைகளை முன்னிறுத்தி தமிழ்த் தேசியக் கட்சிகளின்அழைப்பின் பேரில் இன்று நடக்கும் பொது முடக்கம் ஊடான எதிர்ப்புப் போராட்டத்துக்கு அனைத்து தரப்பினரும் ஆதரவளிக்க வேண்டும் என்று யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கேட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

தமிழ் மக்கள் தமது இருப்பைத் தக்கவைப்பதற்காக எல்லாவழிகளிலும் போராட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள இன்றைய காலச்சூழலில், தமிழ்த் தேசிய இனத்தின் இருப்பை மேலும் கேள்விக்கு உட்படுத்தும் வகையில் சிங்கள இனவாத அரசும் அதனுடன் இணைந்த அரச திணைக்களங்களும் திட்டமிட்டு மேற்கொள்ளும் இன, மத ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டியதும், எமது மக்கள் தமது நியாயமான எதிர்ப்பை பதிவு செய்வதற்கான கருத்துச் சுதந்திரத்தைக்கூட பறிக்கும் சரத்துக்களை உள்ளடக்கியுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை எதிர்க்க வேண்டியதும் காலத்தின் தேவையாக உள்ளது.

இந்த நிலையில், இவ்விரு கோரிக்கைகளையும் பிரதானமாக முன்னிறுத்தி மேற்கொள்ளப்படவுள்ள இந்தப் போராட்டத்துக்கு எனது முழுமையான பூரண ஆதரவை வழங்கும் அதேவேளை, இன, மொழி, பிரதேச வேறுபாடுகளற்று அனைவரும் இதற்கு ஆதரவளிக்க முன்வர வேண்டுமென்றும் பகிரங்கமாக அழைப்பு விடுக்கிறேன் - என்றுள்ளது. (ஐ)

# உள்ளூராட்சி உறுப்பினர் தொகை 5 ஆயிரமாக குறைப்பதற்கு ஆராய்வு

கொழும்பு, ஏப். 25

உள்ளூராட்சி மன்றங்களின் 8 ஆயிரத்துக்கும் உறுப்பினர்களுக்கு பதிலாக, 5 ஆயிரத்துக்கும் குறைவான உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான சாத்தியக்கூறுகளை அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது.

தேசிய எல்லை நிர்ணயக் குழுவால் தொகுக்கப்பட்ட புதிய அறிக்கையின்படி 2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அரசுடன் இணைந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

தேசிய தேர்தல் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய தலைமையிலான குழு, மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை 8 ஆயிரத்திலிருந்து 4,714 ஆக குறைக்க முன்மொழிந்துள்ளது.

இது செயல்படுத்தப்பட்டால், வரி செலுத்துவோர் நிதியில் அரசு கணிசமான சேமிப்பைத் தக்கவைக்கும். இது தொடர்பான பிரேரணை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலுக்காக ஏற்கனவே கோரப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுவை செல்லாததாக்குவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. (ஐ)

# தனியார் பேருந்து சேவைகள் இன்று வடக்கில் இடம்பெறாது!

## ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்து

யாழ்ப்பாணம், ஏப். 25

வடக்கு மாகாண தனியார் பேருந்து சங்கமும் இன்றைய ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளது.

வட மாகாண தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் ஊடகவியலாளர் சந்திப்பு யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற போதே அதன் உப தலைவர் எஸ். டி. கே. இராஜேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ஹர்த்தாலுக்கு வட மாகாண தனியார் போக்குவரத்து சங்கம் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. இதற்கமைய வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் உள்ள தனியார் போக்குவரத்துகள் நாளை (இன்று) இடம் பெறமாட்டாது.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நாங்களும் முழுமையாக எதிர்க்கின்றோம். வடக்கு, கிழக்கு மாகாண தமிழர்களாகிய நாங்கள் ஏற்கனவே பயங்கரவாத தடைச் சட்டத்தால் பல இன்னல்களை அனுபவித்திருக்கின்றோம். ஆகவே, புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கு நாங்கள் எமது எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம்.- என்றும் கூறினார்.

# தந்தை செல்வா நினைவு தூபி திறப்பு நிகழ்வு!

யாழ்ப்பாணம், ஏப். 25

தந்தை செல்வா என்று அறியப்பட்ட சா. ஜே. வே. செல்வநாயகத்தின் 46ஆவது ஆண்டு நினைவு தினமும் நினைவுத் தூபி திரை நீக்கமும் நாளை புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை சேமக் காலையில் நடைபெறும் இந்த நிகழ்வு தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழு தலைவர் ஓய்வுநிலை பேராயர் கலாநிதி சு. ஜெபநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அனைவரையும் பங்கேற்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஐ)



வரலாற்று பெருமைமிக்க நல்லூர் சட்டநாதர் சிவன் ஆலயத் தேர்த் திருவிழாவில் சிறீஸ்கந்தபதி கலாமன்றம் மாணவர்களின் இசை ஆராதனை நிகழ்வு அந்த மன்றத்தின் பணிப்பாளர் திருமதி மா. அனந்தலெட்சுமி தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதில் பங்கேற்ற மாணவர்களுக்கு பாராட்டு பரிசுகளும் வழங்கப்பட்டன. (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
25.04.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், சித்திரை 12

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அதிகம் பேசும் ரணில்?

இலங்கை ஆசியாவின் விமான மற்றும் கப்பல் கேந்திர நிலையமாக மாறுமென்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார். ரணில் ஜனாதிபதியானமையைத் தொடர்ந்து இலங்கையை கட்டியெழுப்பும் திட்டங்கள் தொடர்பில் அடிக்கடி பேசிவருகின்றார். ஆனால், கொழும்பில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதில் இன்னும் ரணிலால் அதிகம் முன்நோக்கிப் பயணிக்க முடியவில்லை. உள்நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த வேண்டுமென்றால் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னைக்கு ஓர் இணக்கமான அரசியல் தீர்வைக் காணவேண்டும். ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வென்று ரணில் கூறுகின்றார் - ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வை நடைமுறைப் படுத்தியிருக்கும் நாடுகள் இருக்கின்றன.

எனவே, ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வென்றால் அது எவ்வாறானதொரு தீர்வென்பதை கூறுவது மட்டுமல்ல - அதற்கான ஆக்கபூர்வான நடவடிக்கைகளை ரணில் விக்கிரமசிங்க செயலில் காண்பிக்க வேண்டும். 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதன் ஊடாக அவ்வாறானதொரு தீர்வை நோக்கிப் பயணிக்க முடியும். 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தப் போவதான சலசலப்புக்களுக்கு அப்பால் எதுவும் நிகழவில்லை. உள்நாட்டுக்குள் அரசியலை ஸ்திரப்படுத்தாமல் நாட்டை ஆசியாவின் கேந்திர நிலையமாக மாற்றப் போவதாகக் கூறுவதெல்லாம் சற்று அதிகமான பேச்சு போன்றே தெரிகின்றது.

ரணில் விக்கிரமசிங்க அனுபமும்ம் ஆற்றலுமுள்ள - சர்வதேச அங்கீகாரமுள்ள ஓர் அரசியல்வாதி என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால், இவ்வாறான தகுதிகள் மட்டும் நாட்டை முன் நோக்கிக் கொண்டு செல்வதற்கு போதுமானவையா? ஏனெனில், இவ்வாறான ஆற்றலிருந்தபோதிலும்கூட ரணிலால் கடந்த காலத்தில் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியவில்லை. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு ரணில் பல்வேறு சமரசங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும். அவ்வாறான சமரசங்களை மேற்கொள்கின்றபோது பல்வேறு தரப்பினரையும் திருப்திப்படுத்த வேண்டிய நிலை ரணிலுக்கு உண்டு.

இலங்கையின் இனத்துவ அரசியல் வரலாற்றை உற்று நோக்கினால் அதிகாரத்துக்காக பல்வேறு தரப்பினரையும் சமரசம் செய்யும் போக்குத்தான் இலங்கை சுதந்திரமடைந்ததாக சொல்லப்படும் காலம் வரையிலான அரசியல் நடைமுறையாக இருக்கின்றது. இந்த நடைமுறையே மறுபுறமாக நாட்டின் பிரச்னைகளை தீர்க்க முடியாமைக்கான காரணமாகும். ஒரு கட்சி ஒரு விடயத்தை பேசுகின்றபோது பிறிதொரு கட்சி அதனை எதிர்ப்பதே இந்த நாட்டின் அரசியல் கலாசாரமாக இருக்கின்றது. இந்த நிலைமையை கடந்து சிந்திக்கக்கூடிய சிங்கள தலைவர் ஒருவர் இதுவரையில் வெளித்தெரியவில்லை. இந்த சவாலை எதிர்கொள்ளக்கூடிய ஒருவராக ரணில் இருப்பாரா? இன்றுவரையில் இந்தக் கேள்விக்கு தெளிவான பதில் இல்லை.

13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தப் போவதாகக் கூறியதும் தென்னிலங்கையில் கொந்தளிப்புகள் ஏற்பட்டன. இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். ரணில் ஜனாதிபதியாக இருக்கின்றபோதே தினமும் வடக்கு, கிழக்கில் பௌத்தமயமாக்கல் தொடர்பான பிரச்னைகள் முகம் காட்டுகின்றன. இந்தப் பிரச்னைக்கு இதுவரையில் உரிய தீர்வில்லை. இந்தப் பின்புலத்தில் ரணில் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றாலும்கூட இவ்வாறான பிரச்னைகளுக்கு நிரந்தரமான தீர்வு சாத்தியப்படுமா என்பதில் மக்கள் மத்தியில் சந்தேகங்கள் உண்டு. ஆனாலும், கொழும்புடன் பேசித்தான் பிரச்னைகளை கையாள வேண்டிய நிலையிலேயே தமிழ் மக்கள் இருக்கின்றனர். இந்தப் பின்புலத்தில் நோக்கினால் ஒப்பீட்டடிப்படையில் ரணில் விக்கிரமசிங்க பிரச்னைகளை அறிந்தவர், தமிழ் அரசியல்வாதிகளோடு உரையாடக் கூடியவர் என்பதில் முரண்பட முடியாதுதான்.

# இன்றைய முடக்கப் போராட்டத்துக்கு தாயக தமிழர் ஆதரவளிக்க வேண்டும்

## நாடு கடந்த தமிழீழ அரசு வேண்டுகோள்

நியூயோர்க், ஏப். 25

தமிழர்களின் முழுமையான எதிர்ப்பையும் - இனியும் தமிழர்கள் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள் என்பதனை சர்வதேசத்துக்கும் - சிங்கள பேரினவாதத்தை எச்சரிக்கும் முகமாகவும் நடக்கும் முடக்கல் போராட்டத்தை தாயகமே திரண்டு வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அத்துடன், தமிழர்களின் விடுதலைக்காக ஏனைய தமிழ்த் தேசிய சக்திகளும் இணைவது காலத்தின் கட்டாயம் என்றும் அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

தமிழர் தாயகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள முழுமையான முடக்கத்துக்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் முழுமையான ஆதரவு தெரிவித்து அந்த அமைப்பின் பிரதமர் பணிமனை விடுத்த செய்திக் குறிப்பிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டது.

மேலும், ஏழு தமிழ்த் தேசியக் கட்சிகள் இனணந்து செவ்வாய்க்கிழமை (இன்று) இரு பிரதான கோரிக்கைகளை முன் நிறுத்தி முழுமையாக தமிழர் தாயகத்தை முடக்கிப் போராடவுள்ளன. தமிழர்களின் முழுமையான எதிர்ப்பையும் - இனியும் தமிழர்கள் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள் என்பதனை சர்வதேசத்துக்கும் - சிங்கள பேரினவாதத்தை எச்சரிக்கும் முகமாகவும் நடக்கும் முடக்கல் போராட்டத்தை தாயகமே திரண்டு வெற்றி பெறச் செய்யுமாறு அன்பாகவும் - உரிமையுடனும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

பயங்கரவாத எதிப்பு சட்ட மூலம் என்ற சிங்களப் பேரினவாத அரசின் திட்டத்தை தோற்கடிப்பது, தமிர்களின் மரபுவழித் தாயகமான வடக்கு, கிழக்கில் எமது வரலாற்றுப் பாரம்பரியத்தையும் தொண்மையையும் சிதைக்கும் நோக்குடன் தமிழர்களின் தொன்மையான வழிபாட்டுத் தலங்கள்மீது திட்டமிட்டு நடைபெறும் சிதைப்புகள் - தாக்குதல்களை தடுத்து நிறுத்துதல் ஆகிய இரு முக்கிய கோரிக்கைகளோடு ஏழு தமிழ்த் தேசியக் கட்சிகளும் இணைந்து தமிழினத்துக்காக செயலாற்றுவதை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் வரவேற்பதுடன் தமிழர்களின் விடுதலைக்காக ஏனைய தமிழ்த் தேசிய சக்திகளும் இணைவது காலத்தின் கட்டாயம் என்பதையும் வலியுறுத்தி நிற்கின்றது.

போராட்டம் வெற்றி பெற அனைவரையும் ஒத்துழைக்குமாறும் - பங்கு பற்றுமாறும் அன்புக் கட்டளையாகவும், உரிமையுடனும் மீண்டும் வேண்டுகின்றோம் - என்றுள்ளது. (ஐ)

# வடக்கு, கிழக்கு அரசியல் கட்சிகள், மக்கள் பொது முடக்கத்துக்கு ஆதரிக்க வேண்டும்!

## ஐக்கிய இராச்சிய தமிழ் அமைப்புகள் கூட்டாக கோரிக்கை

லண்டன், ஏப். 25

வடக்கு கிழக்கு பிராந்தியங்களில் இராணுவ மயமாக்கலை நிறுத்தவும், பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கு எதிராகவும் முன்னெடுக்கப்படும் கதவடைப்பு போராட்டத்துக்கு ஐக்கிய இராச்சியத்தில் முக்கிய அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயல்படும் தமிழ் அமைப்புகள் ஆதரவு தெரிவித்துள்ளன.


வடக்கு, கிழக்கில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும் ஹர்த்தால் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து ஐக்கிய இராச்சியத்தின் தொழிற்கட்சிக்கு ஆதரவான தமிழர்கள் (Tamils For Labour), பிரிட்டிஷ் தமிழ் கொன்சர்வேட்டிவ் (British Tamil Conservatives), தாராளவாத ஜனநாயகக் கட்சியின் தமிழ் நண்பர்கள் (Tamil Friends of Liberal Democrats) ஆகிய அமைப்புகள் கூட்டாக விடுத்த அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சர்வதேச சமூகம், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைக்கு வழங்கிய பல உறுதிமொழிகளுக்கு எதிராக தமிழர் தாயகத்தில் சிவில் விவகாரங்களின் படையினரின் தலையீடுகள் இடம்பெறுகின்றன. தமிழ் மக்களை அச்சுறுத்தி அடிபணியச் செய்யும் வகையில் பயங்கரவாத சட்டம் உள்ளது.

இவற்றுக்கு எதிராக செவ்வாய்க்கிழமை (இன்று) முன்னெடுக்கப்படும் வடக்கு - கிழக்கு தழுவிய பொது முடக்கப் போராட்டத்தை நாங்கள் ஆதரிக்கின்றோம். அனைத்து அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புகள், வடக்கு - கிழக்கிலுள்ள மக்கள் இந்தப் பொது முடக்கத்தில் பங்கேற்று இலங்கை அரசாங்கத்துக்கும் சர்வதேச சமூகத்துக்கும் வலுவான செய்தியை சொல்ல வேண்டும் - என்றுள்ளது.

(ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



## இன்றைய ராசிபலன்

**ஏப்ரல் - 25 செவ்வாய்க்கிழமை**
சுபகிருது வருடம் - சித்திரை 12
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : ஷஷ்டி

**மேடம்**
உற்சாகமாக எந்தக் காரியத்தையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். மாற்றாக வாங்கி இருந்த பணத்தை திருப்பி தருவீர்கள். பழைய பிரச்னைகள் தீரும்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மறதியால் பிரச்னைகள் வந்து நீங்கும். குடும்பத்தாருடன் இணக்கமாக செல்லவும். அடுத்தவர்களின் மனசு காயம் படும்படி பேசாதீர்கள்.

**மிதுனம்**
கணவன் மனைவிக்குள் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள். யாரையும் யாருக்கும் பரிந்துரை செய்ய வேண்டாம்.

**கடகம்**
குடும்பத்தாரின் ஆதரவு கிடைக்கும். நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். சில வேலைகளை விட்டுக்கொடுத்து முடிப்பீர்கள். அரசால் அனுகூலம் உண்டு.

**சிம்மம்**
எதையும் தாங்கும் மனோபலம் கிடைக்கும். உடன்பிறந்தவர்கள் அன்பு காட்டுவார்கள். உங்களால் பயன் பெற்றவர்கள் உங்களுக்கு உதவி செய்வார்கள்.

**கன்னி**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலே ஒருவித படபடப்பு, தாழ்வு மனப்பான்மை வந்து சொல்லும். தன்னம்பிக்கை குறையும். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள்.

**விருட்சிகம்**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்பட தொடங்குவீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். மனைவி வழியில் அனுகூலம் உண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**தனுசு**
பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள் உறவினர்கள் எதிர்பார்ப்புடன் பேசுவார்கள். விஜபிகள் அறிமுகம் ஆவார்கள். அரசால் அனு கூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும்.

**மகரம்**
குடும்பத்தில் அடிப்படை வசதியை மேம்படுத்துவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. அக்கம் பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். உங்களை சுற்றி இருப்பவர்களின் சுய ரூபத்தை தெரிந்து கொள்வீர்கள்.

**கும்பம்**
பழைய இனிய சம்பவங்கள் நினைவுக்கு வரும். எதிர்ப்புகள் அடங்கும். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். பயணங்கள் அலைச்சல் இருந்தாலும் ஆதாயம் உண்டு.

**மீனம்**
குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டு அறிந்து பூர்த்தி செய்வீர்கள். சிலர் உங்களின் உதவியை நாடுவார்கள். உங்களின் செலவுகளை குறைக்க திட்டமிடுவீர்கள்.

# திருமண மண்டபம், மைதானங்களில் மதுபானம் பரிமாறுவதற்கு அனுமதி!

### அரசு இதழ் மூலம் அறிவிப்பு

சென்னை, ஏப். 25

தமிழகத்தில் திருமண மண்டபங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களில் மதுபானம் பரிமாற அரசு அனுமதி வழங்க அரசு முடிவு செய்துள்ளது. அதிகாரிகளிடம் சிறப்பு அனுமதி பெற்று மதுபானம் பரிமாறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருநாள் நடைபெறும் நிகழ்ச்சி என்றாலும் மாவட்ட ஆட்சியரின் அனுமதியைப் பெற்று மதுவிலக்கு துணை ஆணையர்கள் சிறப்பு அனுமதியை வழங்கலாம் என்று தமிழ்நாடு அரசு அரசிதழில் விவரம் வெளியிடப்பட்டுள்ளது. மதுபானக் கூடத்தில் மட்டுமே இதுநாள் வரை மதுபானங்கள் வழங்கப்பட்டு வந்த நிலையில், தமிழக அரசு இதனை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஏற்கெனவே சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்ட நிலையில், தமிழக அரசின் உள்துறை செயலாளர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

திருமணக் கூடங்களில் முறையான அனுமதி இல்லாமல் மதுபானம் பயன்படுத்தப்படுவதாக முறைப்பாடுகள் வந்த நிலையில், அரசு இதனை அறிவித்துள்ளது. பேரூராட்சி, ஊராட்சி, மாநகராட்சி என இதற்கான அனுமதி கட்டணங் கள் மாறுபடுகின்றன. இதற்கான விதிமுறைகளையும் அரசு வழங்கியுள்ளது. (ஐ)

### திருமணம், விளையாட்டு நிகழ்வில் மது:

# தமிழ்நாடு அரசுக்கு எதிராக எதிர்ப்புக்கள் வலுக்கின்றன!

சென்னை, ஏப். 25

திருமண மண்டபங்கள் உட்பட மற்ற நிகழ்ச்சிகளில் மது அருந்துவதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டமைக்கு பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கடும் எதிர்ப்புகளை வெளியிட்டுள்ளன.

எதிர்க்கட்சியான அ. தி. மு. கவின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, பா. ஜ. க.வின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை, நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான், பா. ம. கவின் தலைவர் ரா. அன்புமணி, அ. ம. மு. கவின் டி. டி. வி. தினகரன் ஆகி யோர் கண்டனங்களை வெளியிட்டுள்ளனர்.

“இளைஞர்களின் எதிர்காலத்தை சீரழித்து பண்பாட்டின் மீது திராவகத்தை வீசியுள்ளது தி. மு. க. அரசு. மக்கள் விரோத செயல்களில் ஈடுபட்டு வரும் தி. மு. க. அரசுக்கு மக்கள் விரைவில் தக்க பாடம் புகட்டுவார்கள்”, என்று எடப்பாடி பழனிசாமி கண்டித்துள்ளார்.

“திருமண அரங்கங்கள், விளையாட்டு அரங்கங்கள், விருந்துக் கூடங்கள் மற்றும் வீடுகளில் மது பரிமாற அனுமதிக்கும் அரசாணையை தமிழக அரசு உடனடியாக திரும்பப் பெறாவிட்டால், அந்த அரசாணை திரும்பப் பெறப்படும் வரை மக்களைத் திரட்டி மிகக் கடுமையான பல கட்ட போராட்டங்களை பா.ம.க. முன்னெடுக்கும்.”, என்று அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

“மது ஆலைகளை மூடுவோம் என்று ஆட்சிக்கு வந்த அரசு, வருடா வருடம் உச்ச வரம்பு நிர்ணயித்து மது விற்பனையைப் பெருக்கும் முயற்சியில் உள்ளது. அத்துடன், தி. மு. கவினர் நடத்தும் மது ஆலைகளின் வருமானத்தைப் பெருக்குவதற்காகவே இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது ” என்று அண்ணாமலை சாடியுள்ளார்.

ஆட்சிக்கு வந்ததும் மதுக் கடைகள் மூடப்படும் என்று தேர்தல் பரப்புரையின்போது தி. மு. க. அளித்த வாக்குறுதிக்கு மாறாக, அனைத்து வீடுகளிலும் மதுவை பயன்படுத்தும் வகையில் மது விற்பனையை விஸ்தரித்திருப்பது இதுவரை போதைக்கு அடிமை ஆகாதவர்களையும் குறிவைத்து சமூக மது பழக்கத்தை அதிகரிக்கும் நடவடிக்கையை விடியா அரசு மேற்கொண்டுள்ளதா? - என்று தினகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

தீய பழக்கமாக இருந்த மதுவை, திராவிடப் பண்பாடாகவே தி. மு. க. அரசு மாற்றி நிறுத்தியுள்ளது வெட்கக்கேடானது. இதுதான் உலகம் வியக்கும் திமுகவின் திராவிட மாடல் ஆட்சியா? மக்களாட்சிக்கே ஏற்பட்ட மாபெரும் தலைக்குனிவு என்று நாம் தமிழர் கட்சியின் சீமான் கூறியுள்ளார். (ஐ)

# திருமண மண்டப நிகழ்ச்சிகளில் மது அருந்துவதற்கு அனுமதி இல்லை!

### அமைச்சர் செந்தில் பாலாஜி விளக்கம்

சென்னை, ஏப். 25

திருமண மண்டபங்கள் உட்பட மற்ற நிகழ்ச்சிகளில் மது அருந்துவதற்கான அனுமதிகள் தமிழ்நாட்டில் ஒருபோதும் வழங்கப்பட மாட்டாது என அமைச்சர் செந்தில்பாலாஜி தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் உள்ளிட்ட விளையாட்டு போட்டிகள் நடைபெறுகின்ற போது இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களில் உள்ள நடைமுறையை போல் தமிழ்நாட்டிலும் அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைத்தார்கள். அதன் அடிப்படையில் சர்வதேச விளையாட்டு போட்டிகள் நடைபெறும் போது மட்டும் மது அருந்துவதற்கான அனுமதிகள் வழங்கப்படுகிறது.

குறிப்பாக திருமண மண்டபங்கள் உட்பட மற்ற நிகழ்ச்சிகளில் மது அருந்துவதற்கான அனுமதிகள் தமிழ்நாட்டில் ஒருபோதும் வழங்கப்பட மாட்டாது. மண்டபங்களில் நடக்கக்கூடிய திருமண நிகழ்ச்சிகளுக்கு மது அருந்துவதற்கு அரசு அனுமதி வழங்காது. உலக முதலீட்டாளர் மாநாடு, ஐ. பி. எல் போட்டி போன்ற சர்வதேச அளவிலான விடயங்களுக்கு மட்டும் சிறப்பு அனுமதிகள் வழங்கபடுகிறது - என்றும் அவர் கூறினார். (ஐ)

# சம்பந்தரின் தேவாரங்கள் பதியப்பட்ட தங்க ஏடு மீட்பு

மதுரை, ஏப். 25

தமிழகத்தில் முதல் முறையாக மதுரை அருகேயுள்ள திருவேடகம் ஏடகநாதர் கோயிலில் திருஞான சம்பந்தர் பாடல் பதியப்பட்ட தங்க ஏடு தமிழக அரசால் நியமிக்கப்பட்ட குழுவினரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டம் திருவேடகத்தில் பழமையான சிவத்தலமான ஏடகநாதர் கோயிலேயே இந்த ஏடுகள் மீட்கப்பட்டன. கோயிலில் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு, பராமரிப்பு நூலாக்கத் திட்டப் பணிக் குழுவினர் சுவடிகள் இருப்பு குறித்து ஆய்வு செய்தனர்.

அப்போது, கோயிலில் தங்க ஏடும், கோயில் வரவு - செலவு கணக்கு அடங்கிய சுவடிக் கட்டும் இருந்தன. தமிழகத்தில் முதல்முறையாக தங்க ஏட்டில் பக்தி இலக்கியப் பாடல் பதிந்த நிலையில் கிடைப்பது இதுவே முதல்முறையாகும்.

இது குறித்து சுவடித்துறை பேராசிரியர் சு. தாமரைப்பாண்டியன் கூறுகையில், “கோயில் தல புராணப்படி திருஞானசம்பந்தர் ‘வாழ்க அந்தணர்’ எனும் பதிகம் எழுதி, வைகை நதியிலிட்டதன் நினைவாக அப்பாடலைத் தங்க ஏட்டில் எழுதி பாதுகாத்து வருகின்றனர் என்பதை அறிய முடிகிறது. எழுதப்பட்ட காலம் பற்றிய குறிப்பு இல்லை. எழுத்தமைதி மூலம் 100 ஆண்டுகளுக்கு முன்பு எழுதியதாக இருக்கலாம்”- என்றார்.

# பொதுஜன பெரமுனவின் கூட்டம் சட்டபூர்வமானது

## பீரிஸுக்கு சாகர பதிலடி

கொழும்பு, ஏப். 25

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்சபைக் கூட்டம் சட்டப்பூர்வமானது. இதில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் சட்டரீதியானவை என்று பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மொட்டு கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.



” பொதுச்சபைக் கூட்டம் குறித்து தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டது. கட்சியின் தவிசாளராக இருந்த பீரிசுக்கும் தெரியப்படுத்தப்பட்டது. உரிய நடைமுறைகளை பின்பற்றியே கூட்டம் நடத்தப்பட்டது.” - எனவும் அவர் கூறினார்.

மொட்டு கட்சியின் பொதுச் சபைக் கூட்டத்தின்போது புதிய தவிசாளர் நியமிக்கப்பட்டார். இந்த நியமனம் சட்டப் பூர்வமானது அல்ல என பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ள நிலையிலுயே மொட்டு கட்சி இவ்வாறு அறிவித்துள்ளது. (அ)

# கட்சியைவிட்டு வெளியேறும் துரோகிகளுக்கு இடமில்லை!

## மகிந்த ராஜபக்ஷ அறிவிப்பு



**கொழும்பு, ஏப். 25**

**“கட்சியைவிட்டு வெளியேறி-அரசிலிருந்து வெளியேறி கட்சிக்கும் நாட்டுக்கும் துரோகம் செய்பவர்களின் பதவிகள் பறிபோகும். அதுதான் பீரிஸுக்கும் நடந்தது” - என்று சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**

மொட்டுக் கட்சியின் தவிசாளராகச் செயற்பட்டு வந்த பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் நீக்கப்பட்டு அப்பதவிக்கு சிரேஷ்ட பேராசிரியர் உத்துராவல தம்மரத்ன தேரர் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தற்போது டலஸ் அணி பக்கம் உள்ள பீரிஸ் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மொட்டுவின் தலைவர் மகிந்த ராஜபக்ச எம்.பி. கருத்துத் தெரிவிக்கும்போது-

பதவிகள் நிரந்தரம் இல்லை. அது முதலில் தேடி வரும், பின்னர் பறிபோகும் அல்லது பதவியை இராஜிநாமா செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் வரும். நாட்டின் நன்மை கருதி பிரதமர் பதவியைக்கூட நான் இராஜிநாமா செய்திருந்தேன்.

தற்போது பொதுஜன பெரமுனவின் பொதுச் சபையின் தீர்மானத்துக்கமைய மொட்டுவின் தவிசாளராக இருந்த பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நீக்கப்பட்டு புதிய தவிசாளராக சிரேஷ்ட பேராசிரியர் உதுராவல தம்மரதன தேரர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுஜன பெரமுனவின் பொதுச் சபையின் இந்த நடவடிக்கையை எவரும் சவாலுக்குட்படுத்த முடியாது. கட்சியின் கோட்பாட்டை மீறிச் செயற்பட்ட காரணத்தால்தான் பீரிஸின் பதவி பறிபோனது. இதுதான் உண்மை.

கட்சியை விட்டு வெளியேறி -அரசிலிருந்து வெளியேறி கட்சிக்கும் நாட்டுக்கும் துரோகம் செய்பவர்களின் பதவிகள் பறிபோகும்

பீரிஸுக்குப் பல தடவைகள் அழைப்பு விடுத்திருந்தோம். ஆனால், அந்த அழைப்புக்களை அவர் உதாசீனம் செய்திருந்தார்-என்றார்.

(அ)

# தென்னக்கோனை சந்தேக நபராக பெயரிடுவதற்கு இடைக்கால தடை

கொழும்பு, ஏப். 25

மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி காவல்துறை மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை, காலி முகத்திடல் தாக்குதல் சம்பவத்தில் சந்தேகநபராக பெயரிடுவதை மற்றும் கைது செய்வதை தடுக்கும் வகையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த வருடம் மே 9 ஆம் திகதி, காலி முகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதல் சம்பவத்தில் தன்னை சந்தேக நபராக பெயரிடுமாறு சட்டமா அதிபர் குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு அனுப்பிய கடிதத்தை நடைமுறைப்படுத்துவதை தடுக்கும் வகையில் உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு, சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை மனுவொன்றில் கோரியிருந் தார்.

இதனை பரிசீலித்த நீதியரசர்களான நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் எம்.ஏ.ஆர் மரிக்கார் ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு, இந்த இடைக்கால தடை உத்தரவை பிறப்பித்துள்ளது. (அ)

# பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவரை பதவி நீக்கம் செய்ய ஏற்பாடு?

கொழும்பு, ஏப். 25

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை அந்தப் பதவியில் இருந்து நீக்குவதற்கான பிரேரணை நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படவுள்ளதாக பாராளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்ற உறுப்பினர்களின் சாதாரண பெரும்பான்மையால் அதற்கு அங்கீகாரம் கிடைத்தவுடன் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர், ஆளுங்கட்சியினருடன் கருத்து மோதல்களில் ஈடுபட்டு வருகின்றார். மின் கட்டண அதிகரிப்புக்குக்கூட கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# மாகாண சபைத் தேர்தல் சட்டமூலத்தை இன்று சமர்ப்பிக்கிறார் சுமந்திரன் எம். பி.

கொழும்பு, ஏப். 25

மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை இன்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தீர்மானித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் குறித்த சட்டமூலம் தனிநபர் சட்டமூலமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019 ஒக்ரோபர் 11, அன்று, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலம் தனிநபர் முன்மொழிவாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

அதன்படி, குறித்த சட்டமூலத்தின் முதல் வாசிப்பு இன்று மேற்கொள்ளப்பட உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார்.

இந்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் மாகாண சபைத் தேர்தலை முன்னைய முறையின் அடிப்படையில் நடத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# உலகுக்கு கடன் வழங்கும் நாடாக இலங்கை மாறும்!

## ஐ. தே. க. நம்பிக்கை

கொழும்பு, ஏப். 25

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டம் உரிய முறையில் அமுல்படுத்தப்பட்டால் உலகுக்கு கடன் வழங்கும் நாடாக இலங்கையை மாற்ற முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

ஒரு நாடு கடனை வாங்கும்போது, வாங்கிய கடனை கையாளும் முறைகள், கடனைச் செலுத்தும் முறை ஆகியவற்றை முறையாக கையாளவேண்டும் எனவும், அப்போதுதான் அந்த நாடு உலகில் சக்திவாய்ந்த நாடாக மாற முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் அபிவிருத்திக்கும் நாட்டை உலகத்தின் முன் முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கும் பயங்கரவாதம் ஒடுக்கப்பட வேண்டும் எனவும், அதற்கு பயங்கரவாத தடைச்சட்டத்தை அமுல்படுத்துவது மிகவும் முக்கியமானது எனவும் அவர் தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு எதிராக சில அரசியல் குழுக்கள் பல்வேறு அறிக்கைகளை வெளியிடுவதாகவும், பயங்கரவாதத்தைக் கட்டுப்ப டுத்த இலங்கையில் மாத்திர மன்றி உலகின் ஏனைய நாடுக ளிலும் இவ்வாறான செயற் பாடுகள் அமுல்படுத்தப்படுவ தாகவும் அவர் சுட்டிக்காட்டி னார். (அ)

# குடிதண்ணீர் விநியோகம், மின் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்படும் அபாயநிலை

கொழும்பு, ஏப். 25

நாட்டில் நிலவும் கடும் வரட்சியான வானிலை காரணமாக நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் குறைவதால் குடிதண்ணீர் விநியோகம் பாதிக்கப்படும் என்றும் மின் உற்பத்தியும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

மின் உற்பத்தி நிலையங்களுக்கு அருகில் உள்ள நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 30.8 சதவீதமாகக் குறைந்துள்ளதாகவும் குறைந்த நீர்மட்டம் காரணமாக நாட்டின் மின் உற்பத்தி கணிசமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி காசல்ரீ நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு இப்போது 13 மாகவும், கொத்மலை நீர்த்தேக்கம் மற்றும் மவுஸ்ஸாக்கலை நீர்த்தேக்கங்களின் நீர் மட்டங்கள் முறையே 13.3 மற்றும் 15 வீதமாக பதிவாகியுள்ளன.

விக்டோரியா, ரந்தெனிகல, சமன் வெவ நீர்த்தேக்கங்களின் நீர் கொள்ளளவு முறையே 34, 84 மற்றும் 38 சதவீதங்களாக காணப்படுகின்றன. இதன்போது மொத்த மின் உற்பத்தியில் 14 சதவீதம் மட்டுமே நீர்மின் நிலையங்கள் மூலமாகவும், 72.5 சதவீதம் அனல் மின் நிலையங்களில் இருந்தும் கிடைக்கும் நிலையில், நாளாந்த மின்சாரத் தேவை அதிகரித்து, மணித்தியாலத்திற்கு 45.2 ஜிகாவோட்களை எட்டியுள்ளது.

கடந்த வாரம் முதல் நாட்டின் மின் கேள்வி அதிகரித்துள்ளது டன்,புதன்கிழமை அன்று 49.53 ஜிகாவோட் அதிக பட்ச மின்சக்தி தேவையாக பதிவாகியதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டிருந்தார். (அ)

# ஒரே வருடத்தில் 700 தாதியர் நாட்டிலிருந்து வெளியேற்றம்

கொழும்பு, ஏப். 25

2022 ஜனவரி முதல் 2023 ஜனவரிக்கு இடையில் சுமார் 700 தாதியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இவர்களில் 550 தாதியர்கள் சுகாதார அமைச்சின் அங்கீகாரத்துடன் விடுமுறை எடுத்து ஐந்து வருட காலத்திற்கு மேலதிக கல்விக்காக வெளிநாடு சென்றுள்ளனர். சுமார் 150 தாதியர்கள் எவ்வித அறிவித்தலுமின்றி வெளிநாடு சென்றுள்ளனர்.

தாதியர் சேவையில் தற்போது சுமார் 2,400 வெற்றிடங்கள் காணப்படுவதாகவும், இந்த வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சுகாதார அமைச்சின் பணிப்பாளர் (தாதியர் கட்டுப்பாடு) சாமிக்க கமகே தெரிவித்தார்.

(அ)

# யாழ்ப்பாணத்தில் பிலிம் சிற்றி!

## கூறினார் சிவாஜியின் மகன் ராம்குமார்

யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ்ப்பாணத்தில் பிலிம் சிற்றி ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் மூத்த புதல்வர் ராம்குமார் தெரிவித்துள்ளார்.

அதற்கான பேச்சுவார்த்தைகள் கடந்த இரண்டு தினங்களாக இடம்பெற்றிருந்தாகவும் அவர் குறிப்பிட்டார்.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு விஜயம் செய்த பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார்.

கடந்த இரண்டு நாட்களாக கலை கலாசாரம், பொருளாதார ரீதியிலான அபிவிருத்திகள் தொடர்பில் யாழில் உள்ள பல நண்பர்கள் கலந்துரையாடியுள்ளதாகவும் நடிகர் திலகத்தின் வழிமுறைகளை பின்பற்றி இவ்வாறான பல முன்னேற்ற நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்



பிட்டார்.

வடக்கு மாகாணத்தில் மிக முக்கியமாக யாழ்.மாவட்டம் முன்னேற்றம் அடையவேண்டிய இடமாக காணப்படுவதாகவும் எதிர்வரும் 5 வருடங்களில் அபிவிருத்தி சார்ந்த விடயங்களில் முன்னேற்றத்தை அவதானிக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

சிவாஜி கணேசனால் நாட்டப்பட்ட மாமரம் செளிப்பாக வளர்ந்துள்ளதாகவும் அதனை பார்க்கும் போது மிகவும் மகிழ்ச்சியாக இருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# புலிகள் வீழ்த்தப்பட்ட பின்னர் இலங்கையை சீர்குலைக்க சதி!

## நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு



**கொழும்பு, ஏப். 25**

**தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின் நாட்டை பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் சீர்குலைக்கும் சதித்திட்டத்தின் ஒரு அங்கமாகவே கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் வீழ்ச்சி திட்டமிடப்பட்டதாக பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

நிகழ்வொன்றில் வைத்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாங்கள் வீழ்ச்சியடையவில்லை. எங்கள் வீழ்ச்சி திட்டமிடப்பட்ட ஒன்று. அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த அனைத்து தீர்மானங்களையும் நான் அங்கீகரிக்கவில்லை. ஆனாலும், அவர் நல்ல அர்த்தமுள்ள முடிவுகளையும் எடுத்திருந்தார்.

இயற்கை விவசாயத்தை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கையை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நல்ல நோக்கத்துடனேயே எடுத்திருந்தார். ஒரு விவசாயியின் மகனாக, அவர் தனது முடிவுகளால் விவசாயிகளை சிரமத்திற்கு உள்ளாக்க விரும்பவில்லை.

மேலும், கோட்டாபய ராஜபக்சவின் கோவிட் தடுப்பூசி திட்டமானது இரண்டரை ஆண்டுகளாக நாடு மூடப்பட்ட பின்னர் நிலவிய கடினமான காலக்கட்டத்தில் எடுக்கப்பட்ட ஒன்றாகும்-என்றார். (அ)



# கிளிநொச்சியில் இராணுவத்தினர் காணி சுவீகரிக்க மக்கள் எதிர்ப்பு

கிளிநொச்சி, ஏப். 25

கிளிநொச்சி டிப்போ சந்திப் பகுதியில் உள்ள சந்திரன் பூங்காவுக்குச் சொந்தமான காணியை இராணுவத்தினர் நேற்று அளவீடு செய்தபோது பொதுமக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

கிளிநொச்சி நகர மையத்தில் அமைந்துள்ள டிப்போ சந்தி சந்திரன் பூங்காவுக்குச் சொந்தமான காணியை இராணுவத்தினர் நேற்று அளவீடு செய்தனர். குறித்த காணி நேற்று முன் தினமும் இராணுவத்தினரால் அளவீடு செய்யப்பட்டது.

இவ்வாறு இராணுவத்தினரால் காணி அளவீடு செய்தற்கு மக்களால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

நகரத்தின் முக்கிய தேவைகளுக்குக் காணிகள் தேவைப்படுகின்றபோதும் படையினர் இந்தக் காணியை நீண்ட காலமாக வைத்திருப்பதுடன் சுவீகரிக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளதாக எதிர்ப்பில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (அ)

# 8,231 வர்த்தகர்கள் கைது!

கொழும்பு, ஏப். 25

காலாவதியான பொருட்களை விற்பனை செய்த வர்த்தகர்களை நுகர்வோர் விவகார அதிகாரசபையின் விசாரணை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இதன்போது பண்டிகைக் காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேல் உணவு பொருட்கள் மற்றும் இனிப்பு வகைகளை விற்பனை செய்த 8,231 வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சில வர்த்தகர்கள் காலாவதியான கேக், பிஸ்கட் மற்றும் பிற பொருட்களை விற்பனை செய்துள்ளனர்.

இதேவேளை நாடு முழுவதும் 5,200 விசேட புலனாய்வு அதிகாரிகள், முட்டை வியாபாரிகள் உட்பட ஏனைய விற்பனையாளர்களை கைது செய்ய நுகர்வோர் விவகார அதிகார சபையால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நிர்ணய விலையை விட அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்ததாக நாடு முழுவதும் 809 முட்டை விற்பனையாளர்கள் மற்றும் முட்டை உற்பத்தியாளர்கள் கைது செய்யப்பட்டு அவர்களில் 708 விற்பனையாளர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர். (அ)

# பாடசாலை போக்குவரத்து சேவை கட்டணங்களை குறைக்க தீர்மானம்

கொழும்பு, ஏப். 25

பாடசாலை போக்குவரத்துச் சேவைக்கான கட்டணங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டங்களுக்கு இடையிலான அகில இலங்கை போக்குவரத்து சேவைச் சங்கத்தின் தலைவர் ஹரிஸ்சந்திர பத்மசிறி இதனை தெரிவித்தார்.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் 5 வீதம் தொடக்கம் 8 வீதத்தினால் கட்டண குறைப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# யாழ்.மாநகர சபை சுற்றுச்சூழலில் கழிவுகளை அகற்ற மக்கள் சிறப்பாக செயல்பட வேண்டும்!

## மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ்.மாநகர சபையின் சுற்றுச் சுழலில் காணப்படும் அல்லது போடப்படும் கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கு பொது மக்களே சிறப்புடன் செயற் படவேண்டும் எனவும் தொடர்ந்தும் அங்கிருந்து கழிவுகளை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் யாழ். மாவட்ட அரச அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சபை ஏற்பாட்டில் யாழ்.மாநகர சபை, பாதுகாப்புப் படை மற்றும் பொலிஸ் சேர்ந்து கடற்கரை சுத்திகரிப்புப் பணி நேற்றுக் காலை குருநகரில் முன்னெடுக்கப்பட்டது.

அங்கு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அரச அதிபர் இவ்வாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சபை ஏற்பாட்டில் யாழ்.மாநகர சபை, பாதுகாப்புப் படை மற்றும் பொலிஸ் இணைந்து கடற்கரை சுத்திகரிப்புப் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுதி தொடர்ந்து மாசடைந்து வரக் காரணம் கடல் மூலமாக வருகின்ற அழுக்குகளைக் காட்டிலும் பொது மக்கள் மூலமே அதிகளவு மாசுகள் ஏற்படுகின்றன.

இதனைப் படையினர் மற்றும் போலிசாரின் உதவியுடன் சுத்தம் செய்யலாம். ஆயினும் தொடர்ந்தும் அவர்களை இதில் ஈடுபடுத்துவது என்பது இயலுமான காரியமில்லை.

ஆகையால் பொதுமக்களே குறிப்பாக இப்பகுதி மக்களே சுத்தமாக வைத்திருக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் செயற்படவேண்டும்.

மாநகர சபையினுடைய சுற்றுச்சூழலிலுள்ள கழிவுகளை அகற்றும் செயற்பாட்டை அதிகரிக்குமாறு ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுகின்றேன்.

அத்துடன் இந்த அழுக்குகளை அகற்றுவதற்குரிய ஆளணி வளம் மற்றும் வாகனங்கள் போன்றன பற்றாக்குறையாக இருக்கும் என்பதால் அது தொடர்பாகவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (அ)

# கர்ப்பவதி தாய்மார், சிறுவர்கள் ஆபத்தில்!

## போதியளவு நீர் அருந்தக் கோரிக்கை

கொழும்பு, ஏப். 25

இலங்கையில் பதிவாகியுள்ள அதீத வெப்பநிலை காரணமாக சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், முதியவர்கள் மற்றும் நாட்பட்ட நோய்களுக்கு சிகிச்சை பெற்று வருபவர்கள், நீரிழப்பு அபாயத்தில் உள்ளதாக இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் வைத்தியர் வின்யா ஆரியரத்ன தெரிவித்தார்.

ஆபத்தில் உள்ளவர்கள் சூரிய ஒளியில் நடமாடுவதை கட்டுப்படுத்தவேண்டும். அத்துடன், நீரிழப்பு தவிர்க்க போதியளவு நீர் அருந்தவேண்டும். வயது வந்த ஒருவர் குறைந்தது 2.5 லீற்றர் தண்ணீர் அருந்த வேண்டும் என்று அவர் கூறினார்.

பாடசாலை மாணவர்களை வெளிப்புற நடவடிக்கைகளில் இருந்து, குறிப்பாக அத்தியாவசியமற்ற வெளிப்புற செயல்பாடுகளில் இருந்து விலக்கி வைக்குமாறு வைத்தியர் ஆரியரத்ன வலியுறுத்தினார்.

சிறுவர்கள் வீட்டுக்குள் அல்லது நிழலில் விளையாடுவதற்கு இடம் வழங்கப்படவேண்டும். வெளியில் செல்லும்போது பாதுகாப்பு தொப்பிகளை அணியுமாறு சிறு குழந்தைகள் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்று அவர் மேலும் கூறினார்.

இதற்கிடையில், தொழில் வழங்குநர்கள், தங்கள் ஊழியர்களின் தேவைகளை கவனிக்க வேண்டும். தேவைப்பட்டால் வேலை நேர அட்டவணைகளை சரி செய்ய வேண்டும் என்று வைத்தியர் ஆரியரத்ன குறிப்பிட்டார்.

அத்தியாவசியமான சில வேலைப் பகுதிகள் உள்ளன. எனினும், தொழிலாளர்களுக்கு பொருத்தமான வசதிகளை வழங்குவதில் தொழில்தருநர்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, நாட்டில் நிலவும் வெப்பமான காலநிலை அடுத்த சில நாட்களுக்கு தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# பயனற்ற போராட்டங்கள்தான் நாடு வீழ்ச்சி அடைய காரணம்!

## மகிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டு



கொழும்பு, ஏப். 25

**பிரயோசனமற்ற போராட்டங்கள்தான் நாட்டை கடந்த காலங்களில் படுவீழ்ச்சிக்கு இட்டுச் சென்றது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இன்று முன்னெடுக்கப்படவுள்ள நிர்வாக முடக்கல் தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இந்த விடயத்தை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்கள் போராட்டம் நடத்த முழு உரிமையுண்டு. அதற்காக பிரதேசங்களை முடக்கி வாழ்வாதாரத்தை முடக்கி போராட எவருக்கும் அனுமதி வழங்க முடியாது.

ஒரு சில தரப்பினரின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த முழு அடைப்புப் போராட்டத்துக்கு கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரயோசனமற்ற இப்படியான போராட்டங்கள்தான் நாட்டை கடந்த காலங்களில் படுவீழ்ச்சிக்கு இட்டுச் சென்றன. நாட்டில் சகல உரிமைகளும் இருக்கின்றது என்பதற்காக எவரும் சட்டத்தை மீறி செயற்பட முடியாது.

இப்படியான போராட்டங்களால் கடந்த காலங்களில் பொதுச் சொத்துக்களுக்கும் சேதம் ஏற்பட்டிருந்தமையையும் எளிதில் மறந்துவிட முடியாது-என்றார். (அ)

# திருமணத்துக்குத் தயாரான யுவதி பாரவூர்தி மோதி பலி!

## காதலனுக்கு காயம்

கொழும்பு, ஏப். 25

களுத்துறை - மத்துகம வீதியில் கல் அஸ்ஹேன் பிரதேசத்தில் இருவர் மீது பாரவூர்தியொன்று மோதியதில் யுவதியொருவர் உயிரிழந்தார்.

இந்த சம்பவத்தில் காயமடைந்த இளைஞரொருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்தில் உயிரிழந்தவர் களுத்துறை வெந்தேசிவத்தை பிரதேசத்தை சேர்ந்த 23 வயதுடைய இமாஷா கருணாதிலக்க என்ற யுவதி என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் நேற்று முன் தினம் இரவு களுத்துறையில் இருந்து மத்துகம நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த குறித்த இருவரும், மீன் வாங்குவதற்காக, கல் அஸ்ஹேன சந்தியில் தாம் பயணித்த உந்துருளியை நிறுத்தியுள்ளனர்.

அதன்போது, களுத்துறையில் இருந்து மத்துகம நோக்கி பயணித்த பாரவூர்தியொன்று இருவரையும் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

சம்பவத்தில் பலத்த காயமடைந்த இருவரும் களுத்துறை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது யுவதி உயிரிழந்தார்.

மற்றைய இளைஞன் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் வைத்தியசாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

குறித்த இளம் ஜோடியினர் விரைவில் திருமணம் செய்து கொள்ளவிருந்ததாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பாகிஸ்தானுக்கு யானைகள் பரிசளிக்கின்றது இலங்கை!

கொழும்பு, ஏப். 25

கராச்சி மிருகக்காட்சிசாலையில் ஆபிரிக்க யானை நூர் ஜெஹான் உயிரிழந்ததையடுத்து, பாகிஸ்தானுக்கு இரண்டு யானைகளை பரிசாக வழங்குவதாக இலங்கை கூறியுள்ளதென லாஹூரிலுள்ள இலங்கைத் தூதரக அதிகாரி யாசின் ஜோயா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்-

யானைகளுக்கான கோரிக்கை இலங்கைக்கு, அனுப்பப்பட்டுள்ளது.

யானைகளை வெளிநாடுகளுக்கு அனுப்ப இலங்கை நீதிமன்றம் ஏற்கனவே தடை விதித்துள்ள நிலையில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை இரண்டு பெண் யானைகளை பாகிஸ்தானுக்கு அனுப்பும். அவற்றில் ஒன்று கராச்சி மிருகக்காட்சிசாலைக்கும் மற்றொன்று லாகூருக்கும் வழங்கப்படவுள்ளது.

கடந்த 2017 மே மாதத்தில் உயிரிழந்த சுஷீயின் மரணத்திற்குப் பிறகு லாகூர் மிருகக்காட்சிசாலையில் யானைகள் இருக்கவில்லை.

கராச்சியில் 17 வயதான நூர் ஜெஹானின் மரணம் வருத்தம் அழிக்கிறது. உயிரியல் பூங்காவில் கவனிப்பு இல்லாததால் நீடித்த உடல்நலப் பிரச்னைகளால் அது இறந்தது.

பாகிஸ்தானுக்கு வழங்கப்படும் யானைகள் குறித்த அறிவிப்பு இலங்கை அரசாங்கத்தினால் எதிர்வரும் சில நாட்களில் வெளியிடப்படும்-என்றார். (அ)

# டயனா கமகேயை கைது செய்ய நீதிமன்ற உத்தரவு அவசியமன்று!

கொழும்பு, ஏப். 25

குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழ் இராஜாங்க அமைச்சர் டயனா கமகேயைக் கைது செய்வது தொடர்பான உத்தரவை நீதிமன்றம் பிறப்பிக்காது என கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் அறிவித்துள்ளார்.

இந்த வழக்கில் முன்னதாக, முறைப்பாட்டாளர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ரியென்சி அரசகுலரத்ன மற்றும் உதார முஹந்திரம்கே தலைமையிலான சட்டத்தரணிகள் குழு பிரதிவாதியை கைது செய்யுமாறு கோரியது.

போதிய சாட்சியங்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் டயானா கமகேயைக் கைது செய்ய முன்வரவில்லை என்று அவர்கள் மன்றுரைத்தனர்.

எனவே, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 32ஆவது பிரிவின் கீழ் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் டயனா கமகேயைக் கைது செய்வதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு சட்டத்தரணிகள் முன்னதாக நீதிமன்றில் கோரியிருந்தனர்.

இதனையடுத்து நேற்று தமது முடிவை அறிவித்த நீதவான், இராஜாங்க அமைச்சரை உரிய குற்றங்கள் தொடர்பில் கைது செய்ய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு சட்டத்தின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

எனவே இது தொடர்பில் தாம் உத்தரவு பிறப்பிப்பது தேவையற்றது என நீதவான் தெரிவித்துள்ளார். அதன்பின், வழக்கை திகதி குறிப்பிடாமல் ஒத்திவைக்க நீதிவான் உத்தரவிட்டார். (அ)

# விமான நிலையத்துள் கட்டாக்காலி நாய்கள்!

கொழும்பு, ஏப். 25

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்றுக் காலை கட்டாக்காலி நாய்கள் சுற்றித் திரிந்தமை அவதானிக்கப்பட்டது.

கட்டுநாயக்க விமான நிலையத்துக்குள் நுழையும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை அந்த நாய்கள் சிரமப்படுத்தும் வகையில் நடந்துகொண்டிருந்தன.

இது குறித்து ஊழியர்களிடம் கேட்டபோது, விமான நிலைய முனைய கட்டடத்தின் நுழைவு வாயில்களுக்கு அருகில் உள்ள விமான நிலைய வளாகத்தில் இந்த நாய்கள் சுற்றித் திரிவதாக தெரிவித்தனர்.

இந்த நாய்கள் எப்படியாவது விமான நிலைய ஓடுபாதையிலோ அல்லது விமானக் கட்டடத்திலோ நுழைந்தால், கடுமையான விபத்துகள் ஏற்பட வாய்ப்புள்ளது என பயணிகள் தெரிவித்தனர். (அ)

# இலங்கைக்கு வழங்கிய யானையை திரும்பப் பெற முயலும் தாய்லாந்து!

கொழும்பு, ஏப். 25

2001 ஆம் ஆண்டு தாய்லாந்தினால் இலங்கைக்கு பரிசாக வழங்கப்பட்ட மூன்று யானைகளில் ஒன்றான சக் சுரினை, மீளப் பெறுவதற்கான வழிகளை தாய்லாந்து அரசாங்கம் தொடர்ந்து ஆராய்ந்து வருவதாக அந்நாட்டு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த யானை, அதனை கையாளுபவர்களால் தவறாக நடத்தப்பட்டதாக விலங்குகள் உரிமைகள் அமைப்பினால் கடந்த ஆண்டு அறிக்கைகள் வந்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சக் சுரின் நிலைமையை அறிந்திருந்தாலும், யானையை தாய்லாந்திற்கு கொண்டு செல்வது, அதன் அளவு மற்றும் அதனுடைய காயங்களின் தன்மை காரணமாக சிக்கல் ஏற்பட்டுள்ளன.

தாய்லாந்து சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வள அமைச்சர் வரவுட் சில்பா-ஆர்ச்சா, சாக் சுரினை தமது நாட்டுக்கு கொண்டு வருவதற்கு சி-130 போக்குவரத்து விமானத்தைப் பயன்படுத்துவதே ஆரம்பத் திட்டம் என்று விளக்கினார்.

இருப்பினும், ஆயுதங்கள் மற்றும் தாங்கிகள் போன்ற இராணுவ தளவாடங்களை கொண்டு செல்வதற்காக முதலில் வடிவமைக்கப்பட்ட விமானத்தின் சரக்கு பிடியில், யானையை அடைக்கப் பொருந்தாது என்பது தெளிவாகத் தெரிந்தவுடன் இந்த யோசனை கைவிடப்பட்டது.

இதனையடுத்து, சக் சுரினை மீட்டெடுக்க ஒரு கப்பலை அனுப்பும் திட்டத்தை தாய்லாந்து அரசாங்கம் முன்மொழிந்தது. எனினும் காயப்பட்ட யானைக்கு இரண்டு வார பயணம் மிக நீண்டதாக இருக்கும் என்பதால் இதுவும் பொருத்தமற்றதாகக் கருதப்பட்டது.

சக் சுரின் நாடு திரும்புவதற்கு பொருத்தமான தீர்வைக் காண அமைச்சு தற்போது வெளிவிவகார அமைச்சுடன் ஒத்துழைத்து வருவதாக வரவுட் கூறினார்.

2001 ஆம் ஆண்டு தாய்லாந்தினால் இலங்கைக்கு குறித்த யானை பரிசளிக்கப்பட்டதிலிருந்து அதன் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும், அதன் பின்னர், சக் சுரின் பல இடங்களுக்கு கை மாறியுள்ளதாகவும் அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

சமீப காலம் வரை, குறித்த யானை அளுத்கம கந்தே விகாரையில் வசித்து வந்தது. இலங்கையின் விலங்குகள் பாதுகாப்பு அமைப்பின் கூற்றுப்படி, விகாரையில் யானையின் உறுப்புகள் சங்கிலியால் கட்டுப்படுத்தப்பட்டதால், அதன் உடல் முழுவதும் காயங்கள் ஏற்பட்டதாக தெரிவித்தது.

கடந்த ஆண்டு இறுதியில், சக் சுரினை அவசர மருத்துவ சிகிச்சைக்காக தாய்லாந்துக்கு அழைத்துச் செல்லுமாறு அந்நாட்டு அரசாங்கத்தை அந்த அமைப்பு வலியுறுத்தியது. (அ)

# இறக்குமதி முட்டைகள் மேல் மாகாணத்துக்கு!

கொழும்பு, ஏப். 25

இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை மேல் மாகாணத்துக்கு மாத்திரமே விநியோகம் செய்வதற்கு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக் களம் அனுமதி வழங்கியுள்ளதாக அரச வணிக பல்நோக்கு கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

ஏனைய மாகாணங்களில் உள்ள பாரியளவான வெதுப்பக மற்றும் உணவகங்களில் இறக்குமதி செய்யப்படும் முட்டைகளுக்கு பாரிய கேள்வி உள்ளதாக அதன் தலைவர் ஆசிர வலிசுந்தர தெரிவித்தார்.

தேவைக்கு ஏற்ற வகையில் விநியோகத்தை வழங்க முடியும் என்றாலும் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் அனுமதி கிடைக்காமை பிரச்னையாக உள்ளதாக தலைவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, கடந்த 15ஆம் திகதி நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட 10 இலட்சம் முட்டைகள், நேற்று மேல் மாகாணத்தில் உள்ள வெதுப்பக மற்றும் உணவக உரிமையாளர்களுக்கு விநியோகப்பட்டன.

அத்துடன், கடந்த 19 ஆம் திகதி இறக்குமதி செய்யப்பட்ட 10 லட்சம் முட்டைகள் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# ‘காலிஸ்தான்’ அம்ரித்பால் சிங் கைது குருத்வாரா சாஹிப்பை காவலர்கள் சுற்றி வளைத்ததும் நடந்தது என்ன?

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் தனிநாடு கேட்டுப்போராடும் ‘வாரிஸ் பஞ்சாப் டி’ அமைப்பின் தலைவர் அம்ரித்பால் சிங் ஒரு மாதத்திற்கும் மேலான தேடுதல் வேட்டையின் முடிவில் பஞ்சாப் காவல் துறையினரிடம் சிக்கியுள்ளார். காலிஸ்தான் கோரிய அவர், அதே கோரிக்கையை முன்னிறுத்தி, இந்திராகாந்தி பிரதமராக இருந்த போது மேற்கொண்ட ஆபரேஷன் ப்ளூஸ்டார் நடவடிக்கையில் கொல்லப்பட்ட பிந்தரன் வாலேவின் சொந்த கிராமத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்ரித்பால் சிங்கின் ஆதரவாளர்கள் கடந்த மாதம் துப்பாக்கிகள், வாள்களுடன் பஞ்சாப் காவல் நிலையம் முற்றுகையிட்ட சம்பவம் இந்தியா முழுவதிலும் பெரும் அதிர்வலையை கிளப்பியது. அம்ரித்பால் சிங்கின் கூட்டாளியான லவ்பிரீத் சிங் என்பவரை விடுவிக்க வலியுறுத்தி நடத்தப்பட்ட இந்த போராட்டத்தை அடுத்து, அம்ரித்பால் சிங் குறித்தும், அவரது காலிஸ்தான் பிரிவினை கோரிக்கை தொடர்பாகவும் விவாதங்கள் சூடுபிடித்தன.

இதையடுத்து அம்ரித் பால் சிங்கை கைது செய்ய காவல்துறை நடவடிக்கை எடுத்ததுமே அவர் தலைமறைவாகி விட்டார். தொடர்ந்து தனது இருப்பிடத்தை மாற்றியதன் மூலம் பஞ்சாப் காவல்துறையினரிடம் சிக்காமல் அவர் தப்பி வந்தார். அதேநேரத்தில், பஞ்சாப் முழுவதும் காவல்துறையினர் நடத்திய தேடுதல் வேட்டையில் அவரது ஆதரவாளர்கள் ஏராளமானோர் கைது



செய்யப்பட்டனர்.

அம்ரித்பால் சிங் மீது 16 வழக்குகள் நிலுவையில் உள்ளன. தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழும் அவர் மீது வழக்குகள் உள்ளன. காவல்துறை தேடுதல் வேட்டைக்குப் பயந்து கடந்த மார்ச் 18-ம் திகதி தலைமறைவாகிவிட்ட அம்ரித்பால் சிங்கை பஞ்சாப் மாநிலம் மோகா மாவட்டத்தில் உள்ள ரோட் கிராமத்தில் காவல்துறையினர் சுற்றி வளைத்து கைது செய்துள்ளனர். இதனை பஞ்சாப் காவல்துறையே தனது ட்விட்டர் பக்கத்தில் உறுதி செய்துள்ளது. பஞ்சாப் மக்கள் அமைதி காக்க வேண்டும் என்றும், பொய்யான, உறுதி செய்யப்படாத தகவல்களை சமூக வலைதளங்களில் பரப்ப வேண்டாம் என்றும் பஞ்சாப் காவல்துறை கேட்டுக் கொண்டுள்ளது.

அம்ரித் பால் சிங்குடன் அவரது உறவினர்கள், ஆதரவாளர்கள் பலரும் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். அம்ரித்பால் சிங் கைது செய்யப்பட்ட ரொட் கிராமம் வரலாற்று ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.

1984-ம் ஆண்டு காலிஸ்தான் தனி நாடு கோரி போராடி, அமிர்தசரஸ் பொற்கோயிலுக்குள் புகுந்து கொண்டதால், அப்போதைய பிரதமர் இந்திரா காந்தியால் ஆபரேஷன் ப்ளூ ஸ்டார் என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட ராணுவ நடவடிக்கையில் கொல்லப்பட்ட பிந்தரவாலேவின் சொந்த கிராமம் இதுவாகும். அங்குதான், ‘வாரிஸ் ப்ஞசாப் டி’ இயக்கத்தின் தலைவராக அம்ரித்பால் சிங் கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.




### அம்ரித்பால் சிங் பிடிபட்டது எப்படி?

காலிஸ்தான் கோரி அம்ரித்பால் சிங் பிடிபட்டது எப்படி என்பது குறித்து அதே கோரிக்கைக்காக 1984-ம் ஆண்டு உயிர் நீத்த பிந்தரன்வாலேவின் உறவினரான ஜஸ்பிர் சிங் ரோட்டிடம் பேசினோம்:

இந்த காரணத்திற்காகவே தானும் ரோட் கிராமத்திற்கு வருகை தந்ததாக அவர் கூறினார். அம்ரித்பால் சிங் கைது குறித்துப் பேசிய ஜஸ்பிர் சிங், ‘அம்ரித்பால் சிங் முதலில் ‘நிட்நெம்’ ஓதினார். பிறகு, அங்கே கூடியிருந்தவர்களுடன் அவர் சிறிது உரையாடினார். அதனைத் தொடர்ந்து குருத்வாரா சாஹிப்புக்கு வெளியே வந்தார். அவரை காவல்துறையினர் கைது செய்தனர்.” என்று கூறினார்.

இதற்கு முன் அம்ரிபாத் சிங் தன்னுடன் எந்த வகையிலும் தொடர்பில் இருந்ததில்லை என்றும் அவர் கூறினார்.

### அம்ரித்பால் சிங் கைது - காவல்துறை கூறுவது என்ன?

அம்ரித்பால் சிங் கைது தொடர்பாக பஞ்சாப் காவல்துறை ஐ.ஜி. சுக்செயின் சிங் கில் செய்தியாளர்களிடம் விளக்கம் அளித்தார்.

‘ரோட் கிராமத்தில் உள்ள குருத்வாரா சாஹிப்பிற்குள் அம்ரித்பால் சிங் இருந்த போது நாங்கள் அந்த கிராமத்தை சுற்றி வளைத்துவிட்டோம். குருத்வாரா சாஹிப்பின் புனிதத்தை மதித்து, நாங்கள் உள்ளே செல்லவில்லை. ‘நீங்கள் அனைவரும் சுற்றி வளைக்கப்பட்டிருக்கிறீர்கள், எங்கேயும் தப்ப முடியாது’ என்ற



செய்தியை மட்டும் அனுப்பினோம்.” என்று கூறினார்.

தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகள் (வாரண்ட்) பின்னர் அவரிடம் வழங்கப்பட்டதாக பஞ்சாப் காவல்துறை ஐ.ஜி. சுக்செயின் சிங் கில் தெரிவித்தார்.

அம்ரித்பால் சிங் மீது 16 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவரும், அவரது ஆதரவாளர்களும் சமூகத்தில் பகைமையை பரப்புவது, கொலை முயற்சி, காவலர்கள் மீது கொலைவெறித் தாக்குதல், அரசு ஊழியர்களை பணி செய்ய விடாமல் தடுத்தல் என்பன உள்ளிட்ட வழக்குகள் உள்ளன.

### அசாமில் திப்ருகர் சிறைக்கு அனுப்பி வைப்பு

சீக்கியர்களுக்கென காலிஸ்தான் தனி நாடு கோரி வரும் அம்ரித்பால் சிங்கை பஞ்சாப் காவல்துறையினர் கைது செய்ததுமே, அவரை அசாம் அனுப்பி வைத்துள்ளனர். ரோட் கிராமத்தில் அம்ரித் பாலை கைது செய்ததும், பதிண்டா விமானப்படை தளத்திற்கு அவரை காவல்துறையினர் அழைத்துச் சென்றனர்.

அங்கிருந்து விமானம் மூலமாக அவர் அசாம் மாநிலத்தில் உள்ள திப்ருகர் சிறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். அந்தச் சிறையில், அம்ரித்பால் சிங்கின் கூட்டாளிகள் 8 பேர் ஏற்கனவே அடைக்கப்பட்டுள்ளனர்.

### யார் இந்த அம்ரித்பால் சிங்?

30 வயதான அம்ரித்பால் சிங், காலிஸ்தான் ஆதரவாளர். சீக்கியர்களுக்கென தனி தேசம் உருவாக வேண்டும் என்பதே இந்த இயக்கத்தின் நோக்கம்.

ஜர்னைல் சிங் பிந்த்ரன்வாலே என்னும் சீக்கிய போதகரை பார்த்து உத்வேகம் அடைந்தவர் அம்ரித்பால் சிங். சீக்கியர்களுக்கென தனி தேசம் வேண்டுமென கூறி வந்த ஜர்னைல் சிங் பிந்த்ரன்வாலே, 1984ஆம் ஆண்டு ‘ப்ளூஸ்டார்’ என்னும் இந்திய ராணுவ நடவடிக்கையால் கொல்லப்பட்டார்.

அவருடைய லிங்க்டு இன் முகவரி (டுமைெநனஜஐெசழகடைந), அம்ரித்பால் சிங் ஒரு மெக்கானிக்கல் இஞ்சினியர் என்று கூறுகிறது. பஞ்சாப்பில் உள்ள ஒரு பல்கலைகழகத்தில் பட்டம் பெற்றிருக்கும் இவர், கார்கோ கம்பெனியில் ஆப்ரேஷனல் மேனேஜராக பணிபுரிந்து இருக்கிறார் என்றும் அதன் தகவல்கள் கூறுகிறது.

‘வாரிஸ் பஞ்சாப் டி” (பஞ்சாப்பின் வாரிசுகள்) என்ற அமைப்பின் தலைவராக அம்ரித்பால் சிங் கடந்த ஆண்டு நியமிக்கப்பட்டார். நடிகரும், சமூக ஆர்வலருமான தீப் சித்து என்பவரால் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது. விவசாயிகளால் அப்போது நடத்தப்பட்டு வந்த போராட்டங்களில் நடைபெற்ற கலவரத்தில் இவருக்கும் பங்கு இருப்பதாக கூறப்பட்டு வந்தது.

அமிர்த்பால் சிங்கை அவரது ஆதரவாளர்கள் பிந்த்ரன்வாலேவுடன் ஒப்பிட்டு பேசி வருகின்றனர். பஞ்சாபில் நிலவும் தண்ணீர் தட்டுபாடு, போதைப்பொருட்கள் அதிகரிப்பு போன்ற பிரச்சனைகளுக்கு, சீக்கியர்களுக்கென தனி தேசமே தீர்வு என்ற அவரது கருத்துகள் அனைத்தும் இதற்கு முன்னதாக பிந்த்ரன்வாலே கூறியவை.

கடந்த நவம்பர் மாதம் அம்ரித்பால் சிங், ஒரு நீண்ட மத ஊர்வலத்தை மேற்கொண்டார். பஞ்சாபில் போதை பொருள் பயன்பாட்டை குறைப்பதற்கும், சாதி ரீதியாக நிலவி வரும் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் இந்த ஊர்வலம் மேற்கொள்ளப்பட்டது.

ஊர்வலம் நடந்து ஒரு மாதத்திற்கு பின், குருத்வாராவில் இருந்த நாற்காலிகளை உடைத்து பிரச்சனைகள் செய்து, சிங்கின் ஆதரவாளர்கள் தலைப்பு செய்திகளில் இடம்பெற்றனர்.

சீக்கியர்கள் முதலில் பிரிட்டிஷ்காரர்களுக்கு அடிமையாக இருந்தார்கள், இப்போது இந்துகளுக்கு அடிமையாக இருக்கிறார்கள் என்று ஏஎன்ஐ செய்தி முகமையுடன் பேசிய போது அமிர்த்சிங் பால் குறிப்பிடுகிறார்.

**(பிபிசி)**



# குரங்காட்டி அரசியல்?

■ நிலாந்தன்

**(ஐ.எம்.எஃப்பின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும்போது, பொதுமக்கள் மத்தியில் ஏற்படக்கூடிய கோபத்தையும் விரக்தியையும் திசைதிருப்ப குரங்கும் அரசாங்கத்துக்கு உதவுமா?)**

குரங்குகளை சீனாவுக்கு விற்கும் விடயம் இக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும் செயலுக்குப் போகவில்லை. ஆனால் குரங்குகள் நாட்டின் தலைப்புச் செய்திகளாகிவிட்டன. கடந்த வாரம் இலங்கைத் தீவில் அதிகம் மீம்ஸ்கள் உருவாக்கப்பட்டது குரங்குகளுக்கா?

இலங்கையில் மொத்தம் 30 லட்சம் குரங்குகள் உள்ளதாக கணிப்பிடப்படுகிறது. ஆனால் இக்குரங்குகள் அண்மை ஆண்டுகளில் விவசாயத்துக்கு பெருநாசத்தை விடுவிப்பதாக விவசாயிகள் முறையிடுகின்றார்கள். குறிப்பாக ஆற்றங்கரைகளில் பயிர் செய்பவர்கள் குரங்குகளினால் அதிகம் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. இதனால் விவசாயிகளில் ஒரு பகுதியினர் யானை வேலியை அமைத்து வருவதாகவும் ஒருமுறை அந்த வேலியில் முட்டினால் குரங்கு மீண்டும் அந்த பகுதிக்கு வரத் தயங்கும் என்றும் அவதானிக்கப்பட்டுள்ளது.

மன்னாரைச் சேர்ந்த ஒரு அரசியல் செயற்பாட்டாளர் (அதேசமயம் விவசாயப் பாரம்பரியத்தில் வந்தவர்) சொன்னார், தங்களுடைய ஊரில் முன்பு குரங்குகளின் வாயை கட்டும் நுட்பம் தெரிந்த மாந்திரீகர்கள் இருந் ததாக. அவர்கள் மரங்களில் ஏறி எதையோ செய்வார்க ளாம். அதன் பின் குரங்குகள் அந்த மரங்களுக்கு வந்தாலும் காய்கறிகளில் வாய் வைப்பது இல்லை என்று அவர் சொன்னார். அது விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்க முடியாத ஒரு நம்பிக்கை. ஆனால் காட்டோரமாக விவசாயம் செய்பவர்கள் சில சமயங்களில் குரங்குத் தொல்லை தாங்க முடியாத போது வேட்டைத் துவக்கினால் குரங்குகளைக் கொல்வதும் உண்டு. கொல்லப்பட்ட குரங்கின் உடலை அப்பகுதியில் தொங்கவிடுவார்கள். அதன் மூலம் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு குரங்கின் வருகையை தடுக்கலாம் என்று அவர்கள் நம்பினார்கள்.


விவசாயிகள் மட்டுமல்ல காட்டுக்கு அருகே இருக்கும் கிராமவாசிகளும் வீடுகளில் பயிர்பச்சை வைக்க முடியாத ஒரு நிலைமை காணப்படுவதாக முறையிடுகிறார்கள். குறிப்பாக வன்னிப் பெருநிலத்திலும் யாழ்ப்பாணம் தென்னராட்சியிலும் இந்த நிலைமை உண்டு. வீட்டில் ஆசையாக ஒரு பயிர் பச்சையை வைத்தால் குரங்கு அதை பிடுங்கிச் சாப்பிட்டு விடுகிறது என்று சொல்லுகிறார்கள். மாங்காய்களை மட்டுமல்ல பயன்தரும் மரங்களின் துளிர்களையெல்லாம் குரங்குகள் சாப்பிட்டு விடுவதாகவும் வன்னியில் முறைப்பாடு உண்டு.

இலங்கைத் தீவின் பொருளாதாரத்தை எல்லா அதிர்ச்சிகளின் போதும் தாங்கிப் பிடித்தது விவசாயம்தான். அந்த விவசாயத்துக்கு குரங்கு ஒரு எதிரியாக மாறியிருப்பதாக விவசாயிகள் முறைப்பாடு செய்கிறார்கள். அது தொடர்பாக புள்ளிவிபரங்களும் உண்டு. புள்ளிவிபரங்களால் இக்கட்டுரையை நிரப்பக் கூடாது என்பதனால் அதைத் தவிர்க்கிறேன்.

அரசாங்கம் கடந்த பெப்ரவரி மாதம் குரங்கை ஒரு பீடை என்று அறிவிக்கும் அளவுக்கு குரங்குகள் விவசாயத்துக்கு பாரதூரமான சேதத்தை ஏற்படுத்தத் தொடங்கிவிட்டன. அண்மையில் அரசாங்கம் பாதுகாக்கப்பட வேண்டிய விலங்குகள் பட்டியலில் இருந்து குரங்குகளை நீக்கும் அளவுக்கு குரங்குகள் ஆபத்தானவைகளாக மாறிவிட்டன. எனவே பீடையாக மாறிய குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்து டொலரைச் சம்பாதிக்க அரசாங்கம் முடிவெடுத்ததா?

குரங்குகளை சீனாவுக்கு அனுப்புவது குறித்து சீனா மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கிடையில் எவ்வித பேச்சுவார்த்தைகளும் இடம்பெறவில்லை என்றும் சீன தனியார் நிறுவனமொன்றே இதற்கான கோரிக்கையை முன்வைத்துள்ளதாகவும் அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார். கடந்த வாரம் இடம் பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு கூறியுள்ளார். விவசாயத்துறை அமைச்சருக்கு சீனத் தனியார் நிறுவனமொன்றிடமிருந்து மிருகக்காட்சிசாலைகளுக்காக குரங்குகளைப் பெற்றுக் கொள்ள முடியுமா என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த கோரிக்கை தொடர்பில் அவர் வனஜீவராசிகள் திணைக்களம் உள்ளிட்ட விடயத்துடன் தொடர்புடைய ஏனைய தரப்பினரது பங்குபற்றலுடன் குழுவொன்றை நியமித்து ஆராய்ந்து வருவதாக அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார். எந்தவொரு நாட்டுக்கும் விலங்குகளை சாதாரணமாக பரிமாற்றம் செய்ய முடியாது. எம்மை விட மிகக் கடுமையான சட்ட ஏற்பாடுகள் சீனாவில் காணப்படுகின்றன. எனவே சில ஊடகங்களில் காண்பிக்கப்படுவதைப் போன்று,அரசாங்கம் விலங்குகளை தான் விரும்பியபடி இறைச்சிக்காக ஏனைய நாடுகளுக்கு வழங்கமுடியாது என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை பேச்சாளர் குறிப்பிடும் அந்த சீன நிறுவனத்தின் பெயர் “ஷி செங் வூ யூ அனிமல் பிரீடிங்” என்று கூறப்படுகிறது. கடந்த மார்ச் மாதம் பத்தாம் திகதி அந்த நிறுவனத்திடம் இருந்து அப்படி ஒரு கோரிக்கை முன்வைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. சீனாவில் தனியார் நிறுவனங்கள் என்று அழைக்கத்தக்க சுயாதீனமான நிறுவனங்கள் உண்டா? என்ற கேள்வி இங்கு முக்கியம். மேலும் இது தொடர்பில் கடந்த புதன் கிழமை கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் ருவிற்றரில் பிரசுரித்த தகவலின்படி குரங்கு வியாபாரத்தை உத்தியோகபூர்வமாக உறுதிப் படுத்தவில்லை. ஆனால், இலங்கைத்தீவின் பொறுப்புவாய்ந்த அமைச்சர்கள் தெரிவித்து வரும் தகவல்களை வைத்துப் பார்த்தால் இந்தக் கதை நெருப்பில்லாமல் புகையவில்லை என்று தெரிகிறது. ஒன்றில் எதிர்ப்பு வந்தபடியால் அரசாங்கம் பின்வாங்குகிறது என்று பொருள். அல்லது அரசாங்கம் ஏதோ ஒரு குரங்கு வித்தை காட்டுகிறதா?




இதுதொடர்பில் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர என்னென்ன சொன்னார்?

இலங்கையிலிருந்து குரங்குகளை வாங்கச் சீனா தயாராகி வருவதாக தகவல் கிடைத்ததையடுத்து, அமெரிக்காவும் குரங்குகளைப் பெற விண்ணப்பித்துள்ளது என்று அவர் சொன்னார். எனினும், அமெரிக்காவிற்குத் தேவையான குரங்குகளின் எண்ணிக்கை இதுவரை அறிவிக்கப்படவில்லை. சீனாவுக்கு 100,000 குரங்குகளை வழங்குவதற்கான வழிமுறைகளை தயாரிப்பதற்கான குழுவொன்றை நியமிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றுமவர் சொன்னார். விலங்குகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதே பொருத்தமானது,விலங்குகளை வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டாம் என்று எவரும் கூறவில்லை எனவும் அவர் சொன்னார்.

இலங்கையில் உள்ள குரங்கு ஒன்றை பிடிப்பதற்கு மட்டும் சுமார், 5 ஆயிரம் ரூபாய் வரை செலவிட சீன நிறுவனம் தயாராகவுள்ளதாகவும் அமைச்சர் சொல்லியிருந்தார். குரங்கொன்றிற்காக சுமார் 30 ஆயிரம் ரூபா தொடக்கம் 50 ஆயிரம் ரூபாய்வரையில் சீன நிறுவனம் செலவிட வேண்டியிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும், அதேவேளை, குரங்குகளை சீனாவுக்கு கொண்டு சென்று இறைச்சிக்காக பயன்படுத்தபோவதாக வெளியான செய்திகள் உண்மைக்கு புறம்பானவை என்றும் அவர் சொல்லியிருந்தார். சீனா குரங்குகளை மிருகக் காட்சி சாலைகளில் பாதுகாப்பதற்கென்றே கேட்டுள்ளதாகவும் சொன்ன அமைச்சர், குரங்குகளைப் பிடித்து, தனிமைப்படுத்தி, அவற்றுக்கு நோய்த்தொற்று உண்டா என்பதனை பரிசோதித்து, கூடுகளில் அடைத்து, சீனாவிற்கு கொண்டு செல்வதற்கான முழுச்செலவையும் சீனாவே ஏற்றுக்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்திருந்தார்.

இலங்கையில் இருந்து குரங்குகளை 50 ஆயிரம் ரூபா செலவளித்து சீனாவிற்கு கொண்டு சென்று, அந்த குரங்கை இறைச்சிக்காக பயன்படுத்துவதாயின் 50 ஆயிரம் ரூபாய்க்குமேல் லாபம் வைத்து ஒரு லட்சம் ரூபாய்க்கே விற்க வேண்டிய நிலை ஏற்படும் என்று கூறிய அமைச்சர், ஒரு லட்சம்ரூபாய் கொடுத்து குரங்கை வாங்கிச் சமைப்பதற்கு சீனர்கள் தயாராக இருக்க மாட்டார்கள் என்றும் சுட்டிக்காட்டியிருந்தார்.

எனினும், இலங்கையிலிருந்து அனுப்பப்படும் குரங்குகள் சீனாவின் ஆய்வு கூடங்களுக்கு அனுப்பப்படலாம் என்று இலங்கை சுற்றாடல் நீதி அமைப்பின் தலைவர் ஹேமந்த விதானகே கூறுகிறார். இலங்கையிலிருந்து அனுப்பப்படும் குரங்குகளை அழகுசாதனப் பொருட்களைச் சோதனை செய்வதற்கும் மருத்துவப் பரிசோதனைகளிற்கும் சீனா பயன்படுத்தலாம் என்றும் அவர் கூறுகிறார். மிருகக்காட்சி சாலைகளிற்கான சர்வதேச வரைவிலக்கணங்களின்படி, சீனாவில் 18 மிருகக்காட்சி சாலைகளே உள்ளன. ஒரு மிருகக்காட்சி சாலைக்கு 5,000 குரங்குகள் என்று கணக்கிட்டாலும் சீனா தெரிவிப்பது நம்பக்கூடிய விடயமாக இல்லை என்றும், இலங்கை அரசாங்கம் ஒரு இலட்சம் குரங்குகளை சீனாவிற்கு அனுப்பினாலும் இலங்கையில் குரங்குகளின் எண்ணிக்கை குறையப்போவதில்லை என்றும் அவர் கூறுகிறார்.

“குரங்குகளால்பயிர்களின் உற்பத்திக்கும் விவசாயிகளுக்கும் ஏற்பட்டுவரும் பாதிப்புகள் பாரதூரமானவை. ஆனால், கடந்த சில தசாப்தங்களாகக் குரங்குகளின் கணக்கெடுப்பு நிகழாத நிலையில் குரங்குகளை ஏற்றுமதி செய்ய முற்படுவது இதற்கான தீர்வாக அமையாது. மாறாக, பின்நோக்கிச் சுடுவது போன்று பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். குரங்குகள் தமது உணவு முறையால் காட்டுவெளியெங்கும் விதைகளைத் தூவி மரங்களை இயற்கையாகவே நடவு செய்கின்றன. இதனால், காடுகளின் கட்டுமானத்தில் மையக்கல் இனங்களாகக் (key stone species) கருதப்படும் இக்குரங்குகள் அழிந்தால் காட்டுப் பரப்பளவு சுருங்கி இயற்கைச் சூழலின் சமநிலை குலையும். காபன் உறிஞ்சிகளான காடுகள் சுருங்குவதால் பாதகமான காலநிலை மாற்றங்கள் விரைவுபடுத்தப்பட்டு விவசாயமும் வீழ்ச்சியுறும்.

செங்குரங்குகள் இலங்கைக்கு மட்டுமே உரித்தான ஓர் உள்நாட்டு இனம். இதனைச் சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியம் அழிவை எதிர்நோக்கியுள்ள விலங்குகளில் ஒன்றாகப் பட்டியலிட்டுள்ளது. சீனாவைப் போன்றே இலங்கையும் அழிந்து வரும் காட்டுயிரிகளின் சர்வதேச ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்நிலையில் எதனையுமே விற்று டொலர்களாக்கும் முனைப்பில் உள்ள அரசாங்கம் சட்டபூர்வமான முறையில் நடைமுறைச்சாத்தியமற்ற செங்குரங்குகளின் ஏற்றுமதி குறித்துத் தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பதை உடனடியாக நிறுத்துதல் வேண்டும். கூடவே,குரங்குகளினால் விவசாயத்துறைக்கு ஏற்பட்டுவரும் பாதிப்புகளைக் களைய ஒருங்கிணைந்த மாற்றுப் பொறிமுறையொன்றையும் விரைந்து நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும்” என்று தமிழ்த்தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பெ. ஐங்கரநேசன் கூறுகிறார்.

ஏற்றுமதி செய்யப்படும் குரங்குகள் சீனாவில், மிருகக் காட்சி சாலைகளில் பேணப்படுமென்று கூறப்பட்டாலும், சீனாவில் குரங்கு இறைச்சி சாப்பிடும் பாரம்பரியம் இருப்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது. குறிப்பாக குரங்கின் மூளையிலிருந்து தயாரிக்கப்படும் உணவு சீனாவில் அதிகம் விலை கூடியதாகவும் பெரும் செல்வந்தர்களால் மட்டும் நுகரப்படக்கூடிய ஒன்றாகவும் காணப்படுகிறது. இலங்கையில் இருந்து ஏற்றுமதியாகும் குரங்குகள் சீனாவின் விலங்குகள் காப்பகத்துக்கு எடுத்துச் செல்லப்படுமா அல்லது சமையலறைக்கு எடுத்துச் செல்லப்படுமா என்ற சந்தேகத்தை ஒரு பகுதியினர் கிளப்புகிறார்கள்.

இலங்கைத்தீவு இதுவரையிலும் பணிப்பெண்களையும் வீட்டு உதவியாட்களையும் நாட்டுக்கு வெளியே அனுப்பி வருமானத்தைப் பெறுகின்றது. இப்பொழுது குரங்குகளையும் அனுப்பினால் என்ன? என்று சிந்திக்கும் ஒரு நிலைமை வந்திருக்கிறதா? அரசாங்கம் உண்மையாகவே குரங்குகளை அனுப்புமா இல்லையா என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். ஆனால் ஐ.எம்.எப்பின் நிபந்தனைகளுக்கு கீழ்படிந்த அரசாங்கம் பொதுமக்களை வருத்தும்பொழுது கொதித்து எழும் சிங்கள மக்களைத் திசைதிருப்ப குரங்குவிற்பனை விவகாரம் சில சமயம் அரசாங்கத்திற்கு உதவுமா? அதாவது அரசாங்கம் ஒரு குரங்காட்டியின் வேலையைச் செய்கின்றதா?

2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 20ஆம் திகதி முதல் மத நிகழ்வுகளைத் தவிர காலி முகத்திடலில் இசை நிகழ்ச்சிகள், அரசியல் கூட்டங்கள் மற்றும் மக்கள் கூடும் நிகழ்வுகளுக்கு அனுமதியில்லை என்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது. இது மே நாள் ஊர்வலங்களும் உட்பட எதிர்க் கட்சிகளின் ஆர்ப்பாட்டங்கள் காலிமுகத்திடலை நோக்கி அதாவது தலைநகரில் தூதரகங்களின் பார்வைக்குள் வருவதைத் தடுக்கும் உள்நோக்கமுடையது. அதாவது ஆர்பாட்டங்களையிட்டு அரசாங்கம் உசாராகக் காணப்படுகிறது. எனவே மக்களுடைய கவனத்தைத் திட்டமிட்டுக் குழப்பவேண்டும். அதற்கு குரங்குகள் உதவுமா?

நவீன ஊடகக் கலாச்சாரம் எனப்படுவது ஒரு வகையில் வாசகர்களையும் பார்வையாளர்களையும் குரங்கு நிலையில்தான் வைத்திருக்கின்றது. திட்டமிட்டு ஒரு ட்ரெண்டை செற் பண்ணுவதன்மூலம் ஒரு சமூகத்தின் கூட்டுக் கவனக் குவிப்பை அடிக்கடி மாத்தலாம். குரங்கு கொப்புக்கு கொப்பு தாவுவதைப் போல. இந்த அடிப்படையில் சிந்தித்தால் ஐ.எம்.எஃப்பின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும்போது, பொதுமக்கள் மத்தியில் ஏற்படக்கூடிய கோபத்தையும் விரக்தியையும் திசைதிருப்ப குரங்கும் அரசாங்கத்துக்கு உதவுமா? ■

## மக்கள் பட்டியில் வாடுகையில் எம்.பிக்கள் இறைச்சி புசித்தனர்!

### அசேல சம்பத் விசனம்

கொழும்பு, ஏப். 25

போசணை குறைப்பாட்டால் மக்கள் பாதிக்கப்பட்டுக்கொண்டு இருக்கும் போது மக்களின் வாக்குகளால் பாராளுமன்றத்துக்குச் சென்ற தரப்பினர் ஆட்டிறைச்சியை நன்கு புசித்துள்ளனர் என்று நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர்,

“பாராளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதிகளுக்கான ஆட்டிறைச்சி விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தேசிய நாளிதல் செய்தி வெளியிட்டுள்ளது.

மக்கள் பட்டினியில் வாழும் போது பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் ஆட்டிறைச்சியை சுவைத்துக் கொண்டு இருந்துள்ளனர். இதுவே யதார்த்த நிலைமை.

முட்டையை மக்களுக்கு முறையாக விநியோகிக்க முடியாதவர்களே மக்கள் பிரதிநிதிகளாக பாராளுமன்றத்தில் இருந்துகொண்டு ஆட்டிறைச்சியை சுவைக்கின்றனர். மக்கள் பட்டினியில் வாடும்போது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் ஒருவர்கூட தமக்கு ஆட்டிறைச்சி வேண்டாம். ஆட்டிறைச்சி கொள்வனவை நிறுத்துங்கள் என்று கூறவில்லை.

மூன்று வேளைகள் உணவையும் உட்கொள்ள முடியாது அதிகமான மக்கள் வாழ்கின்றனர். பாராளுமன்றத்தில் உணவுக்கான ஒரு மாதத்துக்கான செலவீனம் ஒரு கோடி ரூபாயாகக் காணப்படுகின்றது. 12 மாதங்களுக்கு 12 கோடி ரூபாய் ஆகின்றது.

எனினும் இந்த மக்கள் பிரதிநிதிகள் மக்கள் குறித்து கரிசனைக்கொள்ளவதில்லை“ - என்றார்.

(ஐ-கே)

## “மக்கள் விரோத செயல்களை நாங்கள் கூட்டாக எதிர்ப்போம்!”

கொழும்பு, ஏப். 25

மக்கள் விரோத செயல்பாடுகளை எதிர்க் கட்சிகள் கூட்டாக எதிர்ப்போம் என்று, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.

எதிர்க் கட்சிகளின் கூட்டம் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும், “உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம், சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடினோம்.

எதிர்க்கட்சிகள் என்ற முறையில் சகலரும் ஒன்றிணைந்து அரசாங்கம் முன்கெண்டு செல்லும் மக்கள் விரோத செயல்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானித்தோம்.

தேசிய அரசாங்கம் அல்ல அமையபோவதில்லை. தற்போது இருக்கும் அரசாங்கம் இரண்டாக பிளவுபடவே உள்ளது. மொட்டுக்கட்சியின் தரப்பினரும் இரண்டாக உடைந்துவிட்டனர். அரசாங்கத்துக்குள்ளும் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

அரசாங்கத்துக்குள் ஏற்பட்டுள்ள பிளவை மூடி மறைப்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பலர் தம்முடன் இணைந்துகொள்ள போகின்றனர் என்று அரசாங்கத்தின் தரப்பில் தொடர்ச்சியாகக் கூறிவருகின்றனர். எனினும், ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்த யாரும் அர சாங்கத்துடன் இணைந்து கொள்ளப்போவ தில்லை” - என்றார்.

(ஐ)

## பெரமுனவுக்கு எதிராக நீதிமன்றை நாடுவேன்!

### ஜீ. எல். பிரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 25

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பதவியிலிருந்து நீக்கியமைக்காக நீதிமன்றத்தை நாடவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சுதந்திர மக்கள் காங்கிரஸின் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும்,

“என்னை கட்சியின் தவிசாளர் பதவியிலிருந்து நீக்கியமை முற்றுமுழுதாக தவறான செயல்பாடாகும். இதேபோன்று, சனிக்கிழமை நடத்தபட்ட சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் சபை கூட்டமும் சட்டத்துக்கு முரணானவே நடத் தப்பட்டது. இதனை நான் பொறுப்புடன் கூறிக்கொள்கின்றேன்.

அந்தக் கூட்டத்தில் எடுத்த சகல தீர்மானங்களும் முற்றிலும் தவறான தீர்மானங்களே. இதனை நாம் நீதிமன்றத்தில் உறுதிப்படுத்துவோம். கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அந்தக் கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது.

எனினும், மகிந்த ராஜபக்ஷ விடம் எழுப்பப்பட்ட எந்த கேள்விகளுக்கும் அவர் முறையாக பதிலளிக்கவில்லை. கட்சியின் பொதுச் செயலாளரிடம் கேட்டுக்கொள்ளுமாறு கூறினார்.

கட்சியின் கூட்டத்தில் யார் பங்கேற்க வேண்டும் யார் பங்கேற்க கூடாது என்று தீர்மானிப்பவர்கள் யார்? சிறீ லங்கா பொது ஜன பெரமுன என்பது தனியாரின் சொத்து கிடையாது.

அன்றைய தினம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒரு வார்த்தையை பயன்படுத்தி என்னை விமர்சித்திருந்தார். ஆரம்பத்தில் என்னை தலைசிறந்த வெளிவிவகார அமைச்சர் என்றும் கட்சிக்கு பலம் சேர்க்கும் நபர் என்று கூறியவர்களே இன்று என்னை வேறு விதத்தில் விமர்சிக்கின்றனர். உண்மையில் முன்னாள் ஜனாதிபதியே விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட வேண்டிய நபராவார்.

எனவே, சிறீ லங்கா பொது ஜன பெரமுனக்குள் என்ன நடக்கின்றது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், என்னை கட்சியின் தவிசாளர் பதவியிலிருந்து நீக்கியது முற்றிலும் தவறான விடயமாகும். அந்தத் தவறுக்காக நான் நீதிமன்றத்தை நாடுவேன்“ - என்றார். (ஐ-கே)

## தனியார் ஊழியர்கள் இன்று பணிக்கு செல்ல தேவையில்லை!

யாழ்ப்பாணம், ஏப். 25

வடக்கு மாகாணத்தை சேர்ந்த தனியார் ஊழியர்கள் எவரும் இன்று செவ்வாய்க்கிழமை பணிக்கு செல்ல தேவையில்லை என்று வடமாகாண தனியார் வர்த்தக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இன்றைய தினம் நடைபெறும் பொது முடக்கப் போராட்டம் தொடர்பில் யாழ். ஊடக அமையத்தில் சங்கத்தின் தலைவர் தலைவர் சாமிநாதன் சிவகுமார் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)






# ஹர்த்தாலுக்கு ஆதரவு தருக!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை

நிந்தவூர், ஏப். 25

**வடக்கு, கிழக்கில் இன்று முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தாலுக்கு அம்பாறை மாவட்ட தமிழ் - முஸ்லிம் மக்கள் முழு ஆதரவை வழங்க முன்வரவேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

கல்முனைப் பிராந்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தரும், ரெலோ அமைப்பின் உப தலைவரும், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஹென்றி மகேந்திரன் விடுத்துள்ள ஊடக அறிக்கை ஒன்றில் இதனை வலியுறுத்தியுள்ளதுடன்.

குறிப்பாக தமிழ் மக்களுடன் இணைந்து அம்பாறை மாவட்ட முஸ்லிம் மக்களும், வர்த்தகர்களும் இந்த ஹர்த்தால், கடையடைப்பு வெற்றிபெற ஆதரவு தர வேண்டுமெனவும் கோரியுள்ளார்.

ஏழு தமிழ்த் தேசியக் கட்சிகளும், பொது அமைப்புக்கள் மற்றும் தொழிற் சங்கங்கள் இணைந்து மேற்படி பூரண ஹர்த்தால், மற்றும் முழுகடையடைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளன.

அனைத்து இன மக்களையும் வதைக்கக் கூடிய படுமோசமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம் நாளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருப்பதை ஆட்சேபிக்கும் பிரதான விடயம் உட்பட பல்வேறு அரசின் தமிழ், முஸ்லிம் மக்கள் மீதான அடக்கு முறைகள், உரிமை மீறல்கள் தொடர்பில் கண்டித்தும் இந்த ஹர்த்தால் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த ஹர்த்தால், கடையடைப்பு போராட்டத்திற்கு ஆதரவுகோரி அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் நேற்று உப தலைவர் ஹென்றி மகேந்திரன் தலைமையிலான குழுவினர் பரப்புரைகளை முன்னெடுத்தனர்.

இது குறித்து ஹென்றி மகேந்திரன் விடுத்துள்ள அறிக்கையில்-

1978 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் தமிழ், முஸ்லிம் மக்களை வதைத்து வரும் நிலையில் தற்போதய ரணில் தலைமையிலான அரசு அதைவிடவும் மோசமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள முனைந்துள்ளது.

தமிழ் மக்கள் மட்டுமன்றி சகல இன மக்களதும் அடிப்படை உரிமைகளைக் கேள்விக் குறியாக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை, ஊடகங்களின் குரலை நசுக்கி, அடிப்படை உரிமைகளை மறுதலிக்கும் அச்சட்டத்தை வடக்கு கிழக்கு மக்கள் முற்றாக நிராகரிக்கின்றோ மென்பதை அரசிற்கு வெளிப்படுத்த வேண்டும்.

அத்துடன் வடக்கு, கிழக்கு பிரதேசங்களை பௌத்த, சிங்கள, இராணுவமயமாக்கும் அரசின் நிகழ்ச்சி நிரலை உடன் நிறுத்தக் கோரியும், இனப் பிரச்னை மற்றும் எம் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்னைகளைத் தீர்க்க வேண்டுமென வலியுறுத்தியும் இன்றைய ஹர்த்தால் கடையடைப்பு போராட்டம் இடம்பெறவுள்ளது.

எனவே, அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல தமிழ், முஸ்லிம் மக்களும் வர்த்தகளும் இதில் இணைந்து ஆதரவு நல்க வேண்டுமென அழைப்பு விடுக்கின்றோம்.

மாவட்டத்திலுள்ள பொதுச் சந்தைகளை மூடியும், கடைகளை அடைப்பதுடன், போக்குவரத்து சேவைகளை நிறுத்துமாறும் கோருகின்றோம்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-06)

## சிறுமி கிரண்யாசிறி உலக சாதனை

அக்கரைப்பற்று, ஏப். 25

அம்பாறை மாவட்டத்தின் கல்முனைப் பிராந்தியத்தில் உள்ள மிகவும் பின்தங்கிய தனிமைப் படுத்தப்பட்டுள்ள துரைவந்திமேடு எனும் குக்கிராமத்தைச் சேர்ந்த ஜனாசுகிர்தன் கிரண்யாஸ்ரீ எனும் நான்கு வயதுசிறுமி இரண்டு உலக சாதனைகளைப் படைத்துள்ளார்.




இவர் தனது இரண்டு கைகளாலும் ஏ-இசற் வரை குறுகிய நேரத்தில் எழுதி உலக சாதனையை படைத்துள்ளார்.

அவர் 2.38 நிமிடங்களில் இரு கரங்களினாலும் ஏ - இசற் வரை எழுதி இச் சாதனையை படைத்துள்ளார்.

அவரின் சாதனையை அவரே முறியடித்து 2 உலக சாதனைகளை படைத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

செல்வி. கிரண்யாசிறி முதலாவது சாதனை ஏ-இசற் ஸ்ரீ3.30 நிமிடங்களில் நிகழ்த்தியிருந்தார். தற்போது

இரண்டாவது சாதனைஏ-இசற் ஸ்ரீ2.38 நிமிடங்களில் நிகழ்த்தியுள்ளார்.

இவை இந்தியாவை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் இரண்டு உலக சாதனை நிறுவனங்கள் மூலம் நிகழ்த்தப்பட்டது . அதற்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

குடும்பத்தில் ஒரே மகளான இவரின் தந்தை கலைஞராவார். தாய் ஒரு தாதிய உத்தியோகத்தராவார்.

அவரின் தந்தை உலகில் மிகச் சிறிய சிவலிங்கத்தை மரத்தில் செதுக்கி உலக சாதனை படைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## மட்டக்களப்பில் மாடு திருடிய 3 பேர் கைது!

### 9 மாடுகளும் மீட்பு

மட்டக்களப்பு, ஏப். 25

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல இடங்களில் உள்ள மாடுகளை நீண்ட காலமாக களவாடி அதனை காத்தான்குடி, ஒல்லிக்குளம் போன்ற இடங்களில் தனியாருக்குச் சொந்தமான காணிகளில் சட்டவிரோதமாக அறுத்து விற்பனை செய்து வந்த சந்தேக நபர்கள் மூவரை காத்தான்குடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர்கள் களவாடி அறுப்பதற்காக மறைத்து வைத்திருந்த மூன்று மாடுகளையும் உயிருடன் மீட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் மாடுகளை அறுத்து அதன் மாமிசக் கழிவுகளை புதைத்து வைத்திருந்த இடத்தையும் பொலிஸார் அடையாளம் கண்டனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்களையும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயனசிறீ தெரிவித்தார். (அ)



## அட்டைப்பள்ளம் கடற்கரை கடல் அரிப்பினால் சேதம்

அக்கரைப்பற்று, ஏப். 25

அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் பிரிவுக்குட்பட்ட அட்டைப்பள்ளம் கடற்கரைப் பிரதேசம் மிகவும் மோசமாக கடல் அரிப்புக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறது.

கடந்த சில நாட்களாக கடல் அரிப்பினால் கரையில் உள்ள தென்னை மரங்கள் விழுந்துள்ளதுடன் கட்டடங்கள் உடைந்து விழுந்துள்ளன .

தென்னை மரங்களை உள்வாங்கிய கடல், அருகிலுள்ள மீனவர் கட்டடம் ,கிணறு என்பவற்றையும் உள்வாங்கி வருகிறது என அப்பகுதி ஆலயத் தலைவர் த.கோபாலன் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். (அ)

## இலவச கல்வியகம் திறப்பு

அக்கரைப்பற்று, ஏப். 25

"3 கிராமங்கள் ஒரு சிந்தனை" என்ற திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் பின்தங்கிய அட்டப்பள்ளம், திராய்க்கேணி, நிந்தவூர் தமிழ்ப்பிரிவு ஆகிய மூன்று கிராமங்களையும் இணைத்து இலவச கல்வியகம் ஒன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

"போகர் கல்வியகம்" என்று பெயரில் இவ் இலவச கல்வியகம் அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலயத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

போகர் கல்வியகத் தலைவரும் , கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீட மாணவனுமான எஸ். கிருஷாந்த் தலைமையில் நடைபெற்ற போகர் கல்வியகத் திறப்புவிழாவில், பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் வீ.ரி. சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு அதிதிகளாக காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி அதிபர் எம் சுந்தரராஜன் மற்றும் அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலய அதிபர் எஸ் .ரகுநாதன் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

அட்டப்பள்ளத்தின் முதலாவது சட்டபீடமாணவி செல்வி கே. சசிந்தினி தனது அனுபவ பகிர்வை அங்கு மேற்கொண்டார்.

விழாவில் மாணவர்கள் பெற்றோர்கள் ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

## இன்றைய பூரண ஹர்த்தாலுக்கு அனைவரும் ஒத்துழையுங்கள்

### கலையரசன் எம்.பி கோரிக்கை

அக்கரைப்பற்று, ஏப். 25

இன்று நாட்டில் திட்டமிட்டு தமிழர் பிரதேசதிலுள்ள தொண்மையான பழமையான ஆலையங்களை ஆக்கிரமித்து பௌத்தமயமாக்குகின்ற செயற்பாடு தீவிரமடைந்துள்ளது. எனவே இந்த ஆக்கிரமிப்புக்கு எதிராக இன்று வடக்கு-கிழக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பூரண ஹர்த்தாலுக்கு வர்த்தக சங்கத்தினரும் அரசியல்கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாவிதன்வெளியில் அமைந்துள்ள காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று மக்கள் மத்தியில் குழப்பத்தை அல்லது ஒரு மோசமான நிலையை ஏற்படுத்துகின்ற செயற்பாடாகவே இந்து ஆலயங்களை ஆக்கிரமிக்கின்ற செயற்பாடு இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. அதனை உடன் நிறுத்தவேண்டும்.

இந்த நாட்டில் இருக்கின்ற அனைத்து தொல்பொருட்களும் பௌத்த மதத்தைப் பிரதிபடுத்துவதாக அமையவில்லை. ஆனால் இந்து மதம் சார்ந்த விடயங்களும் இருக்கின்றன. அவ்வாறு இருக்கின்றபோது உண்மையை சொல்லவேண்டும்.

அதைவிடுத்து இந்த நாடு ஒட்டுமொத்தமாக ஒரு பௌத்த நாடு என்ற அடிப்படையிலேயே இந்த செயற்பாடுகளை நடத்திக் கொண்டிருக்கின்றனர். இதன் காரணமாக வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் தமிழ்த் தேசியத்தை நேசிக்கின்ற கட்சிகளுமாக சேர்ந்து இன்று இந்த நாட்டில் எங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தி தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என்ற அடிப்படையில் ஒரு சமாதானத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்ற அடிப்படையில் இந்த பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பை விடுக்கின்றோம்-என்றார். (அ)

# வடகொரிய ஏவுகணைகளை சுட்டுவீழ்த்த ஜப்பான் ஆணை!

ரோக்கியோ, ஏப். 25

வடகொரியா அடிக்கடி ஏவுகணை சோதனை நடத்தி வருகிறது. தென்கொரியா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகள் இணைந்து போர் பயிற்சியில் ஈடுபடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஏவுகணை சோதனை நடத்துகிறது.

சமீபத்தில் ஜப்பான் கடலை நோக்கி ஏவப்பட்ட ஏவுகணையால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதனால் ஜப்பான் தீவில் உள்ள மக்களை பாதுகாப்பான இடங்களில் பதுங்கி இருக்குமாறு அறிவுறுத்தப் பட்டது. ஆனால், ஏவுகணை ஜப்பான் பகுதிக்குள் விழவில்லை.

இந்த நிலையில் வடகொரியாவின் ஏவுகணைகளை சுட்டு வீழ்த்தவும், ஏவுகணை இடைமறிப்பு கருவிகளை செயல்படுத்தவும் தயாராக இருக்கும்படி இராணுவத் துக்கு ஜப்பானின் பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக ஜப்பான் அமைச்சர் யசுகாசு ஹமாடா, இராணுவத்திடம் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளுக்கு எதிராக அழிவுகரமான நடவடிக்கைகளுக்கு உத்தரவிட வாய்ப்பு உள்ளது என்று தெரிவித்ததாக பாதுகாப்பு அமைச்சு கூறியது. (அ)



# நேட்டோவில் இணைவதற்கு எதிராக சுவீடனில் பேரணி

ஸ்ரொக்கோம், ஏப். 25

வடக்கு அட்லாண்டிக் உடன்படிக்கை அமைப்பில் (நேட்டோ) நாடு சேருவதற்கு எதிராகவும், அரோரா -2023 இராணுவப் பயிற்சிகளுக்கு எதிராகவும் சுவீடனின் கோதன்பர்க்கில் ஆயிரக்கணக்கான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மே 2022 இல் பின்லாந்துடன் இணைந்து நேட்டோ உறுப்பினருக்கான முயற்சியை ஸ்வீடன் சமர்ப்பித்தது.

மார்ச் 31 அன்று, பின்லாந்தின் விண்ணப்பம் கூட்டணியில் உள்ள 30 உறுப்பினர்களாலும் அங்கீகரிக்கப்பட்டது. அதே சமயம் சுவீடனின் விண்ணப்பம் இன்னும் ஹங்கேரி மற்றும் துருக்கியின் ஒப்புதலுக்காக நிலுவையில் உள்ளது.

வடக்கு அட்லாண்டிக் உடன்படிக்கை அமைப்பில் (நேட்டோ) நாடு சேருவதற்கு எதிராகவும், அரோரா -2023 இராணுவப் பயிற்சிகளுக்கு எதிராகவும் சுவீடனின் கோதன்பர்க்கில் ஆயிரக்கணக்கான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பொலிஸ் மதிப்பீட்டின்படி, பேரணியில் 2,000 முதல் 2,500 பேர் கலந்துகொண்டனர்.

நேட்டோவில் இணைய வேண்டாம் போன்ற பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டம் நகரம் முழுவதும் சென்றது.

எதிர்ப்பாளர்கள் நேட்டோவை "அமெரிக்காவின் போர் இயந்திரம்" என்று அழைத்தனர். கூட்டணி ஸ்வீடனை பல மோதல்களுக்கு இழுக்கும் என்று கவலை தெரிவித்தனர்.

ஸ்வீடிஷ் அமைதி மற்றும் நடுவர் சங்கம் மற்றும் அணு ஆயுதக் குறைப்பு யோசனையை ஊக்குவிக்கும் உள்ளூர் சிவில் அமைப்புகளால் இந்த எதிர்ப்பு பேரணி நடத்தப்பட்டது.

நேட்டோவில் இணைந்தால் நோர்டிக் நாடுகள் அணுசக்தி இல்லாத அந்தஸ்தை இழக்க நேரிடும் என்று அவர்கள் கவலை தெரிவித்தனர்.

ஒரு முழு அளவிலான அணுசக்தி யுத்தம் வெடித்தால், பிரதேசம் ஒரு இலக்காக மாறக்கூடும் என்றும் அவர்கள் அச்சம் தெரிவித்தனர்.

சுவீடன் நேட்டோவில் இணைந்தால், வரிகள் உயரும் மற்றும் கல்வி மற்றும் சமூக பாதுகாப்புக்கு பதிலாக அமெரிக்க போர் இயந்திரத்திற்கு நிதியளிக்கும் என்று எதிர்ப்பாளர்கள் வாதிட்டனர். (அ)





# மத போதகரின் போதனையால் இழக்கப்பட்டுள்ள பல உயிர்கள்!

## 47 பேரின் சடலங்கள் காட்டில் கண்டுபிடிப்பு உயிருக்குப் போராடிய நிலையில் பலர் மீட்பு

நைரோபி, ஏப். 25

கென்யாவின் கடற்கரை நகரான மெலிந்தி அருகே மண்ணில் புதைக்கப்பட்டிருந்த 47 பேரின் உடல்கள் தோண்டியெடுக்கப்பட்டுள்ளன. மத போதகரின் பேச்சைக் கேட்டு, கடவுளைப் பார்க்கும் ஆசையில் அவர்கள் நோன்பிருந்து உயிர் நீத்ததாக கூறப்படுவது குறித்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

தோண்டி எடுக்கப்பட்ட உடல்களில் சில குழந்தைளுடையவை என்று கூறியுள்ள பொலிஸார், மேலும் சில உடல்கள் கிடைக்கக் கூடும் என்று தெரிவித்துள்ளனர்.

ஷகாஹோலா வனப்பகுதியில் குட் நியூஸ் இண்டர்நஷனல் சபை உறுப்பினர்கள் 15 பேர் ஆழமில்லாத கல்லறையில் இருந்து கடந்த வாரம் மீட்கப்பட்டார்கள்.

இது தொடர்பாக குற்றம்சாட்டப்படும் மத போதகர் போல் மெக்கின்ஸியிடம் பொலிஸார் விசாரித்து வருகிறார்கள்.

கென்ய அரசு தொலைக்காட்சியான கே.பி.சி., அவரை மக்கள் வழிபடும் தலைவர் என்று வர்ணித்துள்ளது. 58 கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

அவற்றில் ஒரு கல்லறையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேரின் உடல்கள் இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. அதில், 3 குழந்தைகளும், அவர்களின் பெற்றோரும் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்துள்ள மத போதகர் மெக்கின்ஸி, தனது சர்ச்சை கடந்த 2019ஆம் ஆண்டே மூடிவிட்டதாக கூறியுள்ளார். எனினும், அவருக்கு பிணை மறுக்கப்பட்டுள்ளது.

"இயேசுவைச் சந்திக்க" வேண்டுமானால் சாப்பிடாமல் நோன்பு இருங்கள் என்று தன்னைப் பின்பற்றும் மக்களிடம் அவர் போதித்ததாக குற்றம்சாட்டப்படுகிறது.

அவர்கள் உயிரிழப்புக்கு பட்டினி தான் காரணமா என்பதை உறுதி செய்ய, உடல்களில் இருந்து டி.என்.ஏ. மாதிரிகளை எடுத்து, நிபுணர்கள் ஆய்வு செய்து வருவதாக "தி டெய்லி" என்ற கென்ய நாளிதழ் கூறியுள்ளது.

சாப்பிடாமல் நோன்பிருந்து உயிரிழந்ததாக நம்பப்படும் 4 பேரின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டதுமே போதகர் மெக்கின்ஸியை கடந்த 15ஆம் திகதி பொலிஸார் கைது செய்துவிட்டனர்.

சிட்டிசன் தொலைக்காட்சியில் பேட்டியளித்த மெலிந்தி சமூக நீதி மையத்தைச் சேர்ந்த விக்டர் கவுடோ, "நாங்கள் அந்த வனப் பகுதிக்குச் சென்றபோது பெரிய, உயரமான சிலுவை நடப்பட்டிருப் பதைக் கண்டோம். அதன் மூலம், அங்கே 5 பேருக்கும் அதிகமானோர் புதைக்கப்பட்டிருக்கலாம் என்பதை புரிந்து கொண்டோம்" என்றார்.

கென்ய உள்துறை அமைச்சர் கிதுரே கிந்திகி, "அந்த குறிப்பிட்ட வனப்பகுதியில் 800 ஏக்கர் பரப்பளவுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது. அது குற்றம் நடந்த பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது" என்று கூறியுள்ளார்.

அந்த மத போகதர் 3 கிராமங்களுக்கு நாசரேத், பெத்லஹேம், ஜூதேயா என்று பெயரிட்டதாகவும், தன்னைப் பின்பற்றும் அனைவருக்கும் உண்ணாவிரதத்தை தொடங்கும் முன்பு குளங்களில் ஞானஸ்நானம் கொடுத்ததாகவும் கூறப்படுகிறது.

மத அடிப்படைவாதம் நிறைந்த கென்யாவில் இதுபோன்ற ஆபத்தான, அரசால் ஒழுங்குபடுத்தப்படாத அல்லது தன்னையே கடவுளாக வழிபடச் செய்யும் போதகர்களால் மக்கள் ஈர்க்கப்பட்டதற்கு ஆதாரமாக ஏற்கனவே பல நிகழ்வுகள் உள்ளன. (அ)



# தேர்தல் பிரசாரம் தொடங்குவதாக இம்ரான் கானின் கட்சி அறிவிப்பு

இஸ்லாமாபாத், ஏப். 25

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் சட்டசபைத் தேர்தலை விரைவாக நடத்த அந்த நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்ட பிறகும், தேர்தலை நடத்த பிரதமர் ஷபாஸ் ஷெரீப் அரசாங்கம் மறுத்து வருகின்றது.

இந்நிலையில், பஞ்சாப் மாகாணத்தில் தேர்தல் பிரசாரத்தை நேற்று முதல் தொடங்குவதாக முன்னாள் பிரதமர் இம்ரான்கானின் தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சி அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் ஆசாத் உமர் தனது ருவிட்டரில், "தெஹ்ரீக்-இ-இன்சாப் தனது தேர்தல் பிரசாரத்தை உத்தியோகபூர்வமாக தொடங்கவுள்ளது.

அவர்கள் (பாகிஸ்தான் ஜனநாயக இயக்கம்) தயாராக இல்லாமல் இருக்கலாம் ஆனால் நாங்கள் தயாராக இருக்கிறோம்" என்று பதிவிட்டுள்ளார். (அ)

# தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரி மியன்மாரில் கொலை!

நைபிற்றோ, ஏப். 25

மியன்மார் நாட்டில் தேர்தல்கள் ஆணைய அதிகாரி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நாட்டின் தேர்தல் ஆணையத்தின் பிரதித் தலைவர் யாங்கூனில் இவ்வாறு கொல்லப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அரச விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இராணுவப் பிரிவினரே இந்தக் கொலையைச் செய்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகவும், இதுவரையில் குறிப்பிட்ட தகவல்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# நியூசிலாந்தில் நிலநடுக்கம்

வெலிங்டன், ஏப். 25

நியூசிலாந்தின் கெர்மடெக் தீவில் நேற்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 7.2 ஆக பதிவாகியுள்ளது.

பூமிக்கு அடியில் 10 கிலோமீற்றர் ஆழத்தில் குறித்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் உயிர் இழப்போ, பொருட் சேதமோ எதுவும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருந்த போதிலும் நிலநடுக்கத்தை தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. (அ)



## பிளசிஸ், மக்ஸ்வெல் அபாரம் பெங்களூர் அணி த்ரில் வெற்றி!

பெங்களூர், ஏப். 25

டு பிளசிஸ், மக்ஸ்வெல்லின் அரைச்சதங்களின் உதவியால் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூார் அணி 7 ஓட்டங்களால் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை வெற்றி கொண்டது.

பெங்களூரில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் பெங்களூர், ராஜஸ்தான் அணிகள் மோதின.

முதலில் விளையாடிய பெங்களூார் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 189 ஓட்டங்கள் எடுத்தது. பெங்களூர் அணியின் தலைவர் விராட் கோலி ஆட்டத்தின் முதல் பந்திலேயே ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ஷபாஸ் அகமட் டு பிளசிஸுடன் இணைந்தார். ஆனால், அவர் இரு ஓட்டங்களை எடுத்த நிலையில் வீழ்ந்தார். மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த மக்ஸ்வெல் டு பிளசிஸுடன் இணைந்து அதிரடி காட்டினார்.

டூ பிளெசிஸ் 39 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 8 பௌண்ட்ரிகளுடன் 62 ஓட்டங்கள் குவித்தார். மக்ஸ்வெல் 44 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 6 பௌண்ட்ரிகளை பறக்கவிட்டு 77 ஓட்டங்களைக் குவித்தார். மஹிபால் லோம்ரார் 8, தினேஷ் கார்த்திக் 16, பிரபுதேசாய் 0, ஹசரங்க 6, டேவிட் வில்லி 4, விஜய் குமார் வைஷாக் 0, சிராஜ் ஓர் ஓட்டம் எடுத்தனர்.

ராஜஸ்தான் அணி தரப்பில் ட்ரெண்ட் போல்ட், சந்தீப் சர்மா ஆகியோர் தலா 2 விக்கெட்களையும், அஸ்வின், யுவேந்திர சாஹல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

190 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ராஜஸ்தான் அணி விளையாடத் தொடங்கியது. தொடக்க ஆட்டக்காரர் ஜோஸ் பட்லர் ஓட்டம் எடுக்காமலேயே, சிராஜ் பந்தில் வீழ்ந்தார்.

2ஆவது விக்கெட்டுக்காக இணைந்த யஷஸ்வி ஜெய்ஸ்வால், தேவ்தத் படிக்கல் இணை அதிரடியாக விளையாடி ஓட்டங்களைக் குவித்தனர். ஜெய்ஸ்வால் 47 ஓட்டங்களிலும் தேவ்தத் படிக்கல் 52 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். இதன் பின்னர் வந்த அணித் தலைவர் சஞ்சு சாம்சன் 22 ஓட்டங்களிலும், ஷிம்ரன் ஹெட்மேயர் 3 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

கடைசி 2 ஓவர்களில் ராஜஸ்தான் வெற்றிக்கு 33 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் அஸ்வினும், துருவ் ஜூரெலும் அதிரடியாக விளையாட முயன்றனர். 19ஆவது ஓவரில் 13 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் கடைசி ஓவரில் ராஜஸ்தான் அணியின் வெற்றிக்கு 20 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

ஹர்ஷல் பட்டேல் வீசிய 20ஆவது ஓவரின் முதல் 3 பந்துகளில் 10 ஓட்டங்கள் சேர்த்த அஸ்வின் 4ஆவது பந்தில் ஆட்டமிழந்தார். இதைத் தொடர்ந்து கடைசி 2 பந்துகளில் 2 ஓட்டங்கள் மட்டுமே சேர்க்கப்பட்டன.

இதையடுத்து 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 182 ஓட்டங்கள் மட்டுமே சேர்த்த ராஜஸ்தான் 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி கண்டது.

துருவ் ஜூரெல் 34 ஓட்டங்களும், அப்துல் பாசித் ஓர் ஓட்டமும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஹர்ஷல் பட்டேல் 3, முகமது சிராஜ், டேவிட் வில்லி ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். (ஐ)

## பெங்களூர் அணிக்காக மக்ஸ்வெல் 1,000 ஓட்டங்கள்!

பெங்களூர், ஏப். 25

பெங்களூர் அணிக்காக ஐ. பி. எல். தொடரில் ஆயிரம் ஓட்டங்களை குவித்த ஐந்தாவது வீரர் என்ற பெருமையை கிளென் மக்ஸ்வெல் பெற்றார்.

நேற்றுமுன்தினம் ராஜஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் மக்ஸ்வெல் 77 ஓட்டங்களை குவித்திருந்தார். இதன்போதே அவர் 1,005 ஓட்டங்களை பெங்களூார் அணிக்காக பெற்றார்.

முன்னதாக பெங்களூர் அணிக்காக அதிக ஓட்டங்களை குவித்த வீரர்கள் வரிசையில் விராட் கோலி முதலிடத்திலும் (6,903 ஓட்டங்கள்), ஏ. பி. டிவில்லியர்ஸ் 2ஆவது இடத்திலும் (4,491 ஓட்டங்கள்), கிறிஸ் கெயில் 3ஆவது இடத்திலும் (3,163 ஓட்டங்கள்), ஜக்ஸ் கலிஸ் 4ஆவது இடத்திலும் (1,162 ஓட்டங்கள்) உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பத்திரணவின் பந்துவீச்சு பாணி குறித்து சந்தேகம்!

சென்னை, ஏப். 25

ஐ. பி. எல். தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக ஆடும் மதீஷ பத்திரணவின் பந்துவீச்சு சரியானதுதானா என்று இந்திய தரப்புகள் கேள்வி எழுப்பியுள்ளன.

மதீஷ பத்திரண பந்துவீசும் போது வலதுகை தோளுக்கு மேல் வரவேயில்லை. இடுப்பிலிருந்து பந்தை எடுத்து வீசுவது போன்ற தோற்றத்தையே ஏற்படுத்துகின்றார். இது பந்துவீச்சு விதிமுறைகளின் கீழ் அமைந்துள்ளதா என்பது ஆய்வுக்குரியதா என்று இந்திய ஊடகங்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

மேலும், ஐ. சி. சி. விதிமுறைகளின் படி, வீசும் கை தோளுக்கு மேல் நேராக வரவேண்டும் என்பதே விதியாகும். கையை உயர்த்தாமலேயே தாழ்வாக இடுப்பளவில் தன் வலது கையை அப்படியே விட்டு எறிவது போல் இருக்கின்றது பத்திரணவின் பந்துவீச்சு செயல்.



கையை தோளுக்கு மேல் உயர்த்தி வீசும் போது கடைசி நேரத்தில் முட்டியை மடக்குகின்றனர். அதுதான் எறிதல் என்று மட்டுமே விளக்கம் என்று எடுத்துக்கொள்ள முடியாது. முட்டியை 15 பாகைக்கும் மேல் மடக்கி வீசக்கூடாது என்பதும் விதியே. ஆனால், பாகிஸ்தானின் ஹாரிஸ் ரவூப், ஹஸ்னைன் போன்றோர் எறிவது போன்றே பந்துவீசினாலும் இவர்கள் விதிமுறைகளை தாண்டி முட்டியை மடக்கி வீசும் பந்து வீச்சாளர்கள்.

ஆனால், பத்திரணவின் பந்து வீச்சு கை தோளுக்கு மேல் வருவதில்லை என்பதே குற்றச்சாட்டப்படுகின்றது. மேலும், சர்வதேச கிரிக்கெட்டில் வளர்ந்து வரும் வீரரான மதீஷ பத்திரணவின் தவறுகளை இப்போதே சோதித்து திருத்த வேண்டும். அவர் வளர்ந்து விக்கெட்கள் வீழ்த்த ஆரம்பித்த பின்னர் சோதனை நடவடிக்கைகள் என்ற பெயரில் அவரை தண்டிக்கக்கூடாது என்று தெரிவித்துள்ள ஊடகங்கள் முன்னதாக முத்தையா முரளிதரனுக்கு ஏற்பட்ட நிலைமையையும் சுட்டிக்காட்டியுள்ளன. (ஐ)

# ரஹானே அதிரடி ஆட்டம் சென்னை அபார வெற்றி!

கொல்கத்தா, ஏப். 25

கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது.

236 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை துரத்திய கொல்கத்தா அணிக்கு முதல் இரண்டு ஓவர்களில் தொடக்க வீரர்களை ஆட்டமிழக்க செய்து அதிர்ச்சி அளித்தனர் சென்னை பந்துவீச்சாளர்கள்.

முதல் ஓவரை வீசிய ஆகாஷ் சிங் தனது நான்காவது பந்தில் சுனில் நரைனை கிளீன் போல்ட் ஆக்கினார். துஷார் தேஷ்பாண்டே அடுத்த ஓவரில் நாராயண் ஜெகதீசனை ஆட்டமிழக்க செய்தார்.

சிறிதுநேரம் நிலைத்து ஆட போராடிய வெங்கடேஷ் ஐயரை 20 ஓட்டங்களில் மொயின் அலி வெளியேற்ற, கொல்கத்தா அணியின் தலைவர் நிதீஷ் ராணாவை 27 ஓட்டங்களில் நடையைக் கட்ட வைத்தார் ஜடேஜா.

விக்கெட் சரிவுகளுக்கு மத்தியில் ஜேசன் ராய் மரண அடி அடித்து சென்னை பந்துவீச்சாளர்களுக்கு சற்று பயத்தை ஏற்படுத்தினார். 19 பந்துகளில் அரைச்சதம் கடந்த ராய் 61 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது தீக்ஷனவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

இதன்பின் வந்தவர்களில் ரிங்கு சிங் மட்டுமே அணிக்காக போராடினார். மற்றவர்கள் வருவதும் போவதுமாக இருந்தனர்.

இறுதியில் 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 186 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து தோல்வி கண்டது. இதன்மூலம் 49 ரன்கள் வித்தியாசத்தில் சென்னை அணி வெற்றிபெற்றது. நடப்பு சீசனில் சென்னை அணி பெறும் ஐந்தாவது வெற்றி இதுவாகும்.

கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்த ரிங்கு சிங் 53 ஓட்டங்கள் எடுத்தார். சென்னை தரப்பில் தீக்ஷன மற்றும் தேஷ்பாண்டே தலா இரண்டு விக்கெட்களை வீழ்த்தினர்.

ஈடன் கார்டன் மைதானத்தில் நடந்த இப்போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற கொல்கத்தா பந்துவீச்சை தேர்வு செய்தது. இதன்படி, சென்னை அணிக்கு வழக்கம்போல் டெவன் கொன்வே மற்றும் ருதுராஜ் கெய்க்வாட் தொடக்கம் கொடுத்தனர்.

ருதுராஜ் தனக்கே உரித்தான அதிரடி பாணியில் இன்னிங்ஸை தொடங்க, கொன்வே அவருக்கு பக்கபலமாக இருந்தார். பவர் பிளே ஓவர்களில் பந்துகளை எல்லைக்கோடுகளுக்கு பறக்கவிட்ட இந்தக் கூட்டணி ஓவருக்கு 10 ஓட்டங்கள் என்ற சராசரியில் விரைவாக ஓட்டங்களை சேர்த்தது. இணைப்பாட்டம் மூலம் 73 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் இந்தக் கூட்டணியை சுயாஷ் சர்மா பிரித்தார்.

35 ஓட்டங்கள் எடுத்திருந்த ருதுராஜ் கெய்க்வாட் முதல் விக்கெட்டாக வெளியேறினார். இதன்பின்



ரஹானே களம்புகுந்தார். கொன்வே நிதானம் கடைபிடிக்க, ரஹானே அதிரடி காட்டினார். கான்வே இந்தத் தொடரின் 4ஆவது அரைச்சதத்தை கடந்து 56 ஓட்டங்கள் சேர்த்திருந்தபோது வருண் சக்கரவர்த்தி பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இதற்கு பின்னர் சென்னை மேலும் அதிரடியாக ஆடியது. நான்காவது வீரராக களமிறங்கிய ஷிவம் துபே சிக்ஸர் மழை பொழிந்தார். ஐந்து சிக்ஸர்களுடன் 20 பந்துகளில் அரைச்சதம் தொட்ட துபே, அடுத்த பந்தில் விக்கெட்டை இழந்தார். அவருக்கு முன்னதாகவே, 24 பந்தில் அரைச்சதம் கடந்த ரஹானே தனது அதிரடியை தொடர்ந்தார்.

இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 235 ஓட்டங்கள் சேர்த்தது. இந்தத் தொடரின் அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை இதுவாக அமைந்தது. ரஹானே கடைசி வரை ஆட்டமிழக்காமல், 29 பந்துகளை சந்தித்து 71 ஓட்டங்கள் குவித்தார். இதில் 5 சிக்ஸர்கள், 6 பௌண்ட்ரிகள் அடக்கம்.

கொல்கத்தா தரப்பில் குல்வந்த் கெஜ்ரோலியா அதிகபட்சமாக இரண்டு விக்கெட்களை வீழ்த்தினார். (ஐ)

# நெடுந்தீவு பிரதேச செயலகம் முன் நேற்று மக்கள் கூடிப் போராட்டம்

## பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரி

யாழ்ப்பாணம், ஏப். 25

**நெடுந்தீவு பிரதேச செயலக முன்றலில் நேற்று நெடுந்தீவு மக்களினால் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டதோடு பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.**

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற கொடூர கொலைச் சம்பவத்தை தொடர்ந்து நெடுந்தீவில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும், விழிப்புக் குழு உருவாக்குவதற்கு பொலிஸ் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற கோரிக்கைகள் உட்பட மேலும் பல கோரிக்கைகளை முன்வைத்து பொதுமக்களால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (அ)




# மந்திரத்தைச் சரியாக உச்சரிக்காத 8 வயது பௌத்த துறவி சித்திரவதை

கொழும்பு, ஏப். 25

துறவறம் பூண்டு 45 நாட்களேயான எட்டு வயது பௌத்த துறவி ஒருவர் மந்திரத்தினை சரியாக உச்சரிக்கத் தவறியமையால் மூன்று துறவிகளால் தொடர்ந்து கடுமையான முறையில் சித்திரவதைக் குள்ளாக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சித்திரவதைக் குள்ளாக்கப்பட்டுள்ள எட்டு வயதான துறவி கம்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக பேராதனை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் புஸ்ஸல்லாவை பொலிஸ் பிரிவிற் குட்பட்ட இரட்டை பாதைப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள துறவி பௌத்த பூசையின்போது சொல்லி கொடுக்கும் மந்திரத் தினை சரியாக உச்சரிக்க தவறியுள்ளார்.

இதனால் சினமுற்ற மூன்று துறவிகளும் இணைந்து விகாராதிபதி இல்லாத சந்தர்ப்பங்களில் சிறுநீரைப் போத்தலில் கொண்டுவந்து அருந்தச் செய்தும், தேசிக்காயைத் தரையில் பிழிந்து நாக்கினால் நக்குமாறும், தும்பு தடி முறியும் வரை தாக்கிக் கன்னத்தில் அறைந்தும், மான் கொம்பு மற்றும் கத்தரிக்கோலினால் உடம்பில் குத்தியும் சித்திரவதை செய்துள்ளனர்.

இதனால் பற்கள் உடைந்தும், உதடுகள் காதுகள் கிழிந்தும், உடலில் பல இடங்களிலும் குறித்து 8 வயதான பௌத்த துறவி காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

இந்நிலையில், கடந்த 20 ஆம் திகதி கம்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக 22 ஆம் திகதி பேராதனை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்றுவருவதாக காயமுற்ற துறவியின் தந்தை மற்றும் பெரிய தந்தை ஆகியோர் குறிப்பிட்டனர். (அ)

# பலாலியில் 80 இலட்சம் ரூபா பெறுமதியான கேரளக் கஞ்சாவை கைப்பற்றிய கடற்படை!

யாழ்ப்பாணம், ஏப். 25

பலாலி அன்ரனி புரம் பகுதியில் 26 கிலோ கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டு உள்ளதாக பலாலி பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்படையின் புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய அன்ரனிபுரம் பகுதியில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நப ருக்கு வயது 21 எனவும் அவர் அதே பகுதியைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதிகாலை மர்மமான படகு ஒன்று கரை ஒதுங்கிய நிலையில் இந்த கஞ்சா கடற்படை அதிகாரிகளினால் கைப் பற்றப்பட்டது. கைப்பற்றப் பட்ட கஞ்சாவின் பெறுமதி 80 இலட்சம் ரூபாவுக்கும் அதிகம் என கணக்கிடப்பட் டுள்ளது. இந்த கஞ்சா கடத் தலுடன் உடுத்துறைப் பகுதி யைச் சேர்ந்த நபர் ஒருவர் தொடர்புபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞனுக்கு இரண்டு பியர்களை வாங்கிக் கொடுத்து பிரதான கடத்தல் நபர் அழைத்துச் சென்றுள்ளார் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)



# மொரகஹகந்த நீர்த்தேக்கத்தில் ராணுவ சிப்பாய் சடலமாக மீட்பு!

கொழும்பு, ஏப். 25

நாவுல -மொரகஹகந்த நீர்த்தேக்கத்திலிருந்து நேற்றிரவு இராணுவச் சிப்பாய் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நீர்த்தேக்கம் மற்றும் மின் நிலையத்தின் பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டிருந்த கிரலகொல்ல இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் எல்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதான ஒருவரென தெரியவந்துள்ளது.

நீர்த்தேக்கத்தின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பத்து இராணுவச் சிப்பாய்களில் ஒருவர் காணாமல் போயிருந்தமையினால் ஏனையோர் தேடுதல் பணிகளை முன்னெடுத்திருந்தனர்.

அதன்போது, நீர்த்தேக்கத்தின் அணைக்கு கீழே, 300 மீற்றர் ஆழத்தில் நீர் பாயும் பாலத்தின் அடியிலிருந்து அவர் சடலமாக மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் நாவுல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# தொழுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 25

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், கடந்த 3 மாதங்களில் இலங்கையில் தொழுநோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தேசிய தொழுநோய் கட்டுப்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது.

அதன்படி, குறித்த காலப்பகுதியில், நாட்டின் பல பகுதிகளில் சுமார் 355 தொழுநோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர், அவர்களில் பெரும்பாலானவர்கள் கொழும்பு மாவட்டத்திலிருந்து பதிவாகியுள்ளனர்.

மேலும், பதிவாகியுள்ள தொழுநோயாளிகளில் சுமார் 10 வீதமானவர்கள் சிறுவர்கள் என தேசிய தொழுநோய் கட்டுப்பாட்டு இயக்கத்தின் பணிப்பாளர் மருத்துவர் பிரசாத் ரணவீர தெரிவித்தார். (அ)

# குவைத்தில் இருந்து திரும்பினர் 52 பேர்!

கொழும்பு, ஏப். 25

தொழில் நிமித்தமாக குவைத் நாட்டுக்கு சென்று பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து நாடு திரும்ப முடியாமல் இருந்த 52 பேர் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக நாட்டை வந்தடைந்தனர்.

குவைத்தில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பதிவு செய்யப்பட்டு இவ்வாறு நாட்டுக்கு அனுப்பப்பட்ட ஐந்தாவது குழு இதுவாகும், அவர்கள் நேற்று அதிகாலை சிறிலங்கன் எயார்லைன்ஸுக்குச் சொந்தமான யு.எல் 230 விமானத்தில் வந்தடைந்தனர்.

இக் குழுவில் 17 ஆண்களும் 35 பெண்களும் இருந்தனர் என விமான நிலைய செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். (அ)




# கால்நடை வளர்ப்பாளர்கள் மல்லாகத்தில் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 25

கால்நடை வளர்ப்பாளர்கள் மல்லாகம் சந்தியில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று திங்கட்கிழமை காலை மேற்கொண்டனர்.

வலிகாமம் வடக்கு பகுதிகளில் வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்படும் மாடுகள் தொடர்ந்து திருடப்பட்டு வருவதை எதிர்த்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்ட இடத்தில் பசு ஒன்றையும் கட்டி போராட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் செய்த இடத்திலிருந்து காங்கேசன்துறை மூத்த பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்திற்கு சென்று மகஜர் ஒன்றையும் அவர்கள் கையளித்தனர். (அ)

# இன்று நடைபெறும் கதவடைப்புக்கு வவுனியா வர்த்தகர் சங்கமும் ஆதரவு

வவுனியா, ஏப். 25

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு எதிராகவும், தமிழ் மக்களின் பாரம்பரிய வாழிடங்கள், மத தலங்கள், தொல்லியல் தலங்களை ஆக்கிரமிப்பதற்கு எதிராகவும் இன்று முன்னெடுக்கப்படும் கதவடைப்புப் போராட்டத்துக்கு ஆதரவளிப்பதாக வவுனியா வர்த்தகர் சங்கமும் அறிவித்துள்ளது.

இன்றைய போராட்டத்துக்கு ஆதரவளித்து, முழுமையான கதவடைப்பை மேற்கொள்வதாக வடக்கு கிழக்கிலுள்ள அனைத்து பிரதான நகரங்களிலுமுள்ள வர்த்தகர் சங்கங்கள், முச்சக்கர வண்டிச் சாரதிகள் சங்கங்கள், சந்தை வியாபாரிகள், தனியார் போக்குவரத்து சங்கங்கள், சிகையலங்காரிப்பாளர் சங்கங்கள் அறிவித்துள்ளன.

நேற்று காலை வவுனியா வர்த்தகர் சங்கத்தின் விசேட கலந்துரையாடலைத் தொடர்ந்து, இன்று வவுனியாவில் அனைத்துக் கடைகளையும் மூடி, கதவடைப்புக்கு முழுமையாக ஆதரவளிப்பதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இன்றைய கதவடைப்புக்கு ஆதரவளிக்க வவுனியா மாவட்டத்தின் சிகையலங்காரிப்பாளர் சங்கம், முச்சக்கர வண்டிச் சாரதிகள் சங்கம் உள்ளிட்ட பல சங்கங்கள் ஏற்கெனவே தீர்மானித் திருந்தமை குறிப்பிடத் தக்கது. (அ)

## பிரபல...

வெளியிட்டுள்ளார். தவிர, ஏராளமான விமர்சனங்கள், அறிமுகங்கள், பத்திகள், குறிப்புகளையும் எழுதியவர்.

தனித்துவமான கதைக்களம், கதை சொல்லும் பாணிக்கு புகழ்பெற்றவரான குப்பிழான் ஐ. சண்முகன் கலாபூஷணம், ஆளுநர் விருது, பேராதனை பல்கலைக்கழகத்தின் சங்க சான்றோன் விருதுகள் உட்பட பல விருதுகளையும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வெடுக்குநாறிமலை...

திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்த வவுனியா - நெடுங்கேணி - வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தின் விக்கிரகங்கள் கடந்த மார்ச் 26ஆம் திகதி உடைக்கப்பட்டன. சில சிலைகள் காணாமல் போயிருந்தன.

இது தொடர்பாக ஆலய நிர்வாகம் தொடர்ந்த வழக்கு நேற்று வவுனியா மாவட்ட நீதிமன்றில் விசாரிக்கப்பட்டது. இந்த வழக்கில் ஆலயம் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் முன்னிலையானார்.

இந்த வழக்கில் நேற்றைய தினம் தொல்லியத் திணைக்களம், வனவளத் திணைக்களங்களின் பிரதிநிதிகள் முற்படவில்லை. எனவே, அவர்கள் வழக்கில் முன்னிலையாகும்வரை ஆலயத்துக்கு வாகனங்களில் செல்வதைத் தவிர்க்க வேண்டும் என்று பொலிஸார் கேட்டனர். இதனை ஆலய நிர்வாகம் ஏற்றுக் கொண்டது.

தொல்பொருள் திணைக்கள பிரதிநிதிகள் மன்றில் முற்படாததாலேயே உடைக்கப்பட்ட விக்கிரகங்களை மீளவும் பிரதிஷ்டை செய்வது தொடர்பில் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பிக்கவில்லை. அடுத்த தவணையில் தொல்லியல்துறையின் கருத்தையும் அறிந்து, பொருத்தமான கட்டளையை பிறப்பிப்பதாக நீதிபதி இதன்போது உத்தரவிட்டார்.

இந்த வழக்கு நாளை மறுதினம் வியாழக்கிழமை மீண்டும் விசாரணைக்கு வருகின்றது. (ஐ)

## கொலைக்கு...

கொலைச் சந்தேகநபர் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின் றார். இந்த நிலையில், நேற்றைய தினம் சந்தேகநபரை கொலை நடந்த இடத்துக்கு விசாரணைக்காக பலத்த பாதுகாப்புடன் பொலிஸார் அழைத்துச் சென்றனர்.

அவர் வழங்கிய தகவல்களின் அடிப்படையில், வீட்டின் பின்புறமாக உள்ள கிணற்றிலிருந்து கொலைக்கு பயன்படுத்திய கத்தி, கொலையின்போது சந்தேகநபர் அணிந்திருந்த சாரம் என்பன மீட்கப்பட்டன.

நெடுந்தீவு - மாவிலி இறங்குதுறை அருகே ஐந்து முதியவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். ஒரு முதியவர் படுகாயங்களுக்கு இலக்கான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். கடந்த சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர் பொலிஸாரால் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டிருந்தார். அவரிடம் இருந்து 26 பவுண் நகைகள் மீட்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பாராளுமன்ற...

இந்த உத்தேச சட்டத்துக்கு நாடு முழுவதும் பல மட்டங்களில் இருந்தும் எதிர்ப்புகள் கிளம்பின. எனினும், இந்த வாரம் இந்தச் சட்டமூலம் திருத்தங்கள் செய்யப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

எனினும், நேற்று மாலை வரை பயங்கரவாத எதிர்ப்பு சட்ட சமர்ப்பணம் பாராளுமன்ற ஒழுங்குபத்திரத்தில் உள்வாங்கப்படவில்லை என்று பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ உறுதிப்படுத்தினார். (ஐ)

## தமிழ் எம். பிக்கள்...

என்றும் தெரிவிக்கப்பட்டது.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் தமிழர் பகுதிகளில் தொடரும் ஆக்கிரமிப்பு - மரபுரிமைகள் அழிப்புக்கு எதிராக இன்றைய தினம் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால் கடைப் பிடிக்கப்படுகின்றது.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாகவே தமிழ்த் தேசியக் கட்சிகள் பாராளுமன்றத்தில் கவனயீர்ப்பு போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐ. எம். எவ்....

கும் சூது விளையாட்டுக்கு ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவளிக்காது. எனவே, நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் நாட்டுக்கும் மக்களுக்கும் சாதகமானதாக மாற்றப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

நாட்டில் உள்ள சகல பிரச்னைகளுக்குமான ஒரே தீர்வு சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் என்று காண்பிப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. நாணய நிதியத்துக்கு ஆரம்பத்திலேயே செல்ல வேண்டும் என்று நாம் வலியுறுத்தினோம். எனினும், அப்போதைய அரசாங்கம் அதனை காலம் கடத்தி இன்று நாட்டுக்கு சாதகமற்ற இணக்கப்பாட்டை எட்டியுள்ளது.

வங்குரோத்தடைந்த நாடொன்றுக்கு நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்களை நிர்வகிக்க முடியாது. எனவே, அவை மறுசீரமைக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால், இந்த அரசாங்கம் இலாபம் ஈட்டும் நிறுவனங்களை விற்பதற்கு முன்னெடுக்கும் முயற்சிகளை அனுமதிக்க முடியாது.

மாறாக, நஷ்டமடையும் நிறுவனங்களை இலாபம் ஈட்டும் நிறுவனங்களாகவும் இலாபம் பெறும் நிறுவனங்களை மேலும் இலாபம் ஈட்டும் நிறுவனங்களாகவும் மாற்றுவதற்கே அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகளை எடுக்காமல், தேசிய சொத்துக்களை விற்பதை தேசிய குற்றமாகவே நாம் பார்க்கின்றோம்.

எனவே, நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தினை நாட்டுக்கும், மக்களுக்கும் பொருத்தமான வகையில் மாற்றியமைக்க வேண்டும். இது நாட்டையும், மக்களையும் நேசிக்கும் சகலரின் பொறுப்பாகும். இதனை விடுத்து, நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டின் ஊடாக மக்கள் மீது மென்மேலும் வரிச் சுமைகளை சுமத்துவது பொறுத்தமற்றது. எனவே, கடன் பெற்றதை பட்டாசு கொளுத்தி கொண்டாட வேண்டிய சந்தர்ப்பம் இதுவல்ல.

பண்டோரா ஆவணங்கள் ஊடாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஏன் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை? இது குறித்த விசாரணைகளை முன்னெடுத்தால் நாடு இழந்துள்ள பல மில்லியன் டொலர்களை மீளப் பெற முடியுமல்லவா? மக்கள் மீது சுமத்தப்படும் வரிச் சுமைகளை ஓரளவுக்கேனும் குறைக்க முடியுமல்லவா?

நாட்டை வங்குரோத்தடையச் செய்தவர்களுக்கு எதிராக அரசாங்கம் ஏன் எந்தவொரு நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை என்பது அனைவர் மத்தியிலும் காணப்படும் பிரதான பிரச்னையாகும். எவ்வாறிருப்பினும், ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் இவ்வனைத்துக்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று உறுதியளிக்கின்றேன். சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாடு என்ற போர்வையில் தேசிய சொத்துக்களை தாரை வார்க்கும் சூதுக்கு எம்மால் ஒத்துழைப்பு வழங்க முடியாது - என்றார். (ஐ)

## புதிய....

லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

எதிர்க் கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொண்ட கூட்டம் பாராளுமன்ற கட்டடத்தில் நேற்று நடைபெற்றது. எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இது தொடர்பில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

“உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு எதிர்ப்பை தெரிவிப்பது, அந்த சட்டமூலத்தை அரசாங்கம் மீளப்பெறுவதற்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுளது.

எதிர்க்கட்சிகளின் கூட்டணியாக நின்று செயல்படுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. இந்தக் கூட்டத்தில் சகல எதிர்க் கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். எதிர்வரும் காலங்களில் கொண்டுவரப்படவுள்ள ஒடுக்குமுறைகளை கட்டவிழ்த்துவிடும் சகல சட்டமூலங்களுக்கும் நாம் எதிர்ப்பை தெரிவிப்பது தொடர்பிலான திட்டங்கள் இதன்போது முன்மொழியப்பட்டன.

உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம், மத்திய வங்கி சட்டமூலம், சர்வதேச நாணய நிதியம் என்பன தொடர்பில் எதிர்க்கட்சிகள் ஏகமனதான தீர்மானத்துக்கு வந்துள்ளோம்“, என்றார். (ஐ -கே)

## குருதி...

எனினும், குருதி கொடையாளர்கள் வழங்கும் இரத்தம் போதியதாக இல்லை. எனவே, இரத்த வகைகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் முன்வந்து குருதிக் கொடை செய்யுமாறு யாழ்ப்பாணம், தெல்லிப்பழை இரத்த வங்கிகள் அறிவித்துள்ளன. (ஐ)

## அரசாங்கத்துக்கு...

ராக செயல்படும் பல குழுக்கள் நேற்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கூடிக் கலந்துரையாடின. பாராளுமன்றத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ரவூப் ஹக்கீம், மனோ கணேசன், பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், டலஸ் அழகப்பெரும, லக்ஷ்மன் கிரியெல்ல, இம்தியாஸ் பகீர் மார்க்கர், சந்திம வீரக்கொடி, கலாநிதி நாலக கொடஹேவா, உதய கம்மன்பில, கலாநிதி ஹர்ஷ டி சில்வா, வீரசுமண வீரசிங்க, தயாசிறி ஜயசேகர, கெவிது குமாரதுங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது, பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை ஒன்றிணைந்து எதிர்ப்பது என்று எதிர்க்கட்சிகள் முடிவு செய்தன.

இதேநேரம், பயங்கரவாத தடை சட்டம், பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் என்பவற்றுக்கு பதிலாக மாற்று வேலைத்திட்டம் என்று அவசியம் என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்டோர் வலியுறுத்தினர்.

இந்நிலைமை தொடர்பாக சட்ட, தேசிய, சமூக மற்றும் சர்வதேசம் என நான்கு வழிகளில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

பயங்கரவாத சட்டமூலத்தை தோற்கடிக்க அனைத்து எதிர்க்கட்சிகளுடன் இணைந்து செயற்படுவோம் என அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இது தொடர்பான பொது உடன்படிக்கை பணிகளை தொடர்வதற்காக எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் எதிர்க் கட்சித் தலைவர்களின் இணக்கப்பாட்டுடன் இம்தியாஸ் பக்கீர் மார்க்கர் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி அரசியல் கட்சி ஒற்றுமையின் அழைப்பாளராக நியமிக்கப்பட்டார்.

## காத்தான்குடி விபத்தில் இளைஞர் ஒருவர் பலி!

மட்டக்களப்பு, ஏப். 25

மட்டக்களப்பு காத்தான்குடியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

புதிய காத்தான்குடி பஸ் டிப்போ பகுதி தக்வா பள்ளி வீதியைச் சேர்ந்த 17வயதுடைய முகம்மட் அகீல் என்பவரே உயிரிழந்துள்ளார்.

ஆரையம்பதி ஊர் வீதி சந்தைக்கு முன்பாக மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து இந்த விபத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## வடக்கு...

தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட்), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்.) ஜனநாயகப் போராளிகள், தமிழ்த் தேசிய கட்சி மற்றும் இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகியவையே கூட்டாக இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பிரதான வர்த்தக சங்கங்கள், தனியார் ஊழியர் சங்கம், போக்குவரத்து சங்கங்கள், ஆசிரியர் சங்கங்கள், மீனவர் சங்கங்கள், சம்மேளனங்கள், சலூன்கள் மற்றும் இந்து, கிறிஸ்தவ மடங்கள் மற்றும் அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர் அமைப்புகள் மற்றும் பொது அமைப்புகள், சங்கங்கள் என்பன ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளன.

**கல்வித்துறை இயங்காது**

வடக்கு மாகாணத்தின் ஆசிரியர் சங்கங்களும் இன்றைய போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. அத்துடன், தனியார் கல்வி நிலையங்களும் இன்று மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இன்றைய தினம் பாடசாலைகளுக்கு பெற்றோரை அனுப்ப வேண்டாம் என்றும் வீணான சிரமங்களை தவிர்க்குமாறும் ஆசிரியர் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

**சந்தைகள், கடைகள் பூட்டு**

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பெரு, சிறு நகரங்கள், கிராமங்களிலும் வர்த்தக நடவடிக்கைகள் முற்றாக முடங்கும். அத்துடன், சந்தைகளும் இயங்காது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று சலூன்களும் இன்று மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**போக்குவரத்து பாதிக்கும்**

இதேநேரம், தனியார் பேருந்து சங்கங்களும் ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவு தெரிவித்துள்ளன. இதனால், பொதுப் போக்குவரத்தும் பாதிக்கப்படும்.

**நீதிமன்ற நடவடிக்கையும் பாதிக்கும்**

இன்றைய தினம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீதிமன்றங்களில் வழக்குகளில் முன்னிலையாவதில்லை என்று பல சட்டத்தரணிகள் அமைப் புக்கள் அறிவித்துள்ளன. இதனால், நீதிமன்றங்களில் வழக்கு நடவடிக்கைகளும் பாதிக்கப்படும்.

**முஸ்லிம்களும் ஆதரவு**

இன்றைய தினம் முன்னெடுக்கும் போராட்டத்துக்கு முஸ்லிம் மக்களும் பெருவாரியாக ஆதரவு வழங்கவுள்ளனர். மன்னார், வவுனியா மாவட்டங்களிலும் கிழக்கு மாகாணத்திலும் வர்த்தக நிலையங்களை பூட்டி இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு அளிப்பர். இந்த ஹர்த்தாலுக்கு பள்ளிவாசல்களும் ஆதரவு தெரிவித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# புதிய பயங்கரவாத சட்டத்தை ஒன்று திரண்டு எதிர்ப்போம்!

## சிவசக்தி ஆனந்தன் அழைப்பு

வவுனியா, ஏப். 25

**புதிய பயங்கரவாத சட்டத்துக்கு எதிராக முழுமையான ஒத்துழைப்பை வழங்குங்கள் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.**

இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள ஹர்த்தாலுக்கு ஆதரவு கோரி வவுனியாவில், துண்டுபிரசுரம் வழங்கும் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இந்த பயங்கரவாத தடைச் சட்டம் எந்த அளவு தூரம் தமிழ் மக்களை பாதித்திருக்கிறது, எவ்வளவு தூரம் உயிரிழப்புகள், சொத்தழிவுகளை ஏற்படுத்தியிருக்கிறது என்பதனை நாங்கள் அனுபவித்திருக்கின்றோம்.

அதைவிட மிக மோசமான முறையிலே இந்த பயங்கரவாத தடை சட்டம் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட இருக்கின்றது. ஆகவே பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்த புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக வாக்களிக்கவேண்டும்.

அதேபோல் இதுவரை காலமும் தமிழ் மக்கள்தான் இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இனியும் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. அதைவிட இனிவரும் காலத்தில் தெற்கில் உள்ள சிங்கள முற்போக்கு சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்கள், மாணவர்கள் இந்த புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தினால் மிக மோசமாக பாதிக்கப்பட இருக்கிறார்கள்.

ஆகவே தமிழ் மக்கள் இதுவரை காலமும் பயங்கரவாத தடைச் சட்டத்தால் எந்தளவு தூரம் பாதிக்கப்பட்டார்களோ அதைவிட மோசமான அளவுக்கு தெற்கில் உள்ள சிங்களவர்களும் பாதிக்கப்பட இருக்கின்றபடியால் தமிழ், சிங்கள, முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதனைக் கடுமையாக எதிர்க்கவேண்டும். பயங்கரவாத



தடைச் சட்டம் நடைமுறைப் படுத்துவதற்கு எதிராக வாக்களிக்க வேண்டும்.

அதேபோல் வடக்கு-கிழக்கில் நடைபெறுகின்ற பௌத்தமயமாக்கல், ஆலயங்கள் இடிப்பது அல்லது பௌத்த சிலைகளை நிறுவுவது போன்ற அனைத்து விடயங்களுக்காகவும், இன்று இந்த பூரண கடையடைப்புக்கு பொதுமக்கள், பொது அமைப்புக்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் முழுமையான ஒத்துழைப்பை, ஆதரவை வழங்கவேண்டும்-என்றார். (அ)

# தப்புல டி லிவேராவை கைது செய்யத் தடை!

## பயங்கரவாத தடுப்புப் பிரிவுக்கு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஏப். 25

முன்னாள் சட்ட மா அதிபர் தப்புல டி லிவேராவை கைது செய்வது அல்லது அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்வதை தடுக்கும் வகையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக முன்னாள் சட்ட மா அதிபர் தெரிவித்த கருத்து தொடர்பில் வாக்குமூலமளிக்க வருமாறு பொலிஸ் பங்கரவாத விசாரணைப் பிரிவு மூன்று சந்தர்ப்பங்களில் அவருக்கு அழைப்பு விடுத்திருந்தது.

இதற்கு எதிராக முன்னாள் சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த எழுத்தாணை மனுவை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதிபதி ஏ.மரிக்கார் ஆகியோர் அங்கம் வகிக்கும் நீதிபதிகள் குழாம் இந்த இடைக்கால தடை உத்தரவை பிறப்பித்துள்ளது.

முன்னாள் சட்ட மா அதிபர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வாவுடன் சட்டத்தரணிகளான ஷானக்க குரே மற்றும் திமித்ர அபேசேகர ஆகியோர் மன்றில் ஆஜராகியிருந்தனர். (அ)

# இறக்குமதி பொருட்களின் விலை உயரும் சாத்தியம்!

கொழும்பு, ஏப். 25

இறக்குமதிசெய்யப்படும் பொருட்களின் விலைகள் உயர்வடையும் சாத்தியங்கள் காணப்படுவதாக தெரிவிககப்படுகின்றது.

பொருட்களை இறக்குமதி செய்யும்போது அவை உற்பத்தி செய்யப்பட்ட நாடுகளில் செலுத்தப்படும் கொள்கலன் கையாளுகைக் கட்டணங்களை உள்ளூர் இறக்குமதியாளர்கள் செலுத்த நேரிட்டுள்ளது.

இதனால் எதிர்வரும் மே மாதம் முதல் இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய பொருட்களின் விலை கிலோ ஒன்றுக்கு 4 அல்லது 5 ரூபாவினால் உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்தியாவசியப்பொருள் இறக்குமதியாளர் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரட்ன இதனைத் தெரிவித்தார்.

கடந்த 2012ஆம் ஆண்டு முதல் இந்த கையாளுகை கட்டணங்கள் உற்பத்தி செய்யப்படும் நாடுகளில் அறவீடு செய்யப்பட்டு வந்தன. எனினும், தற்போதைய துறைமுகங்கள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இந்த நடைமுறையை மாற்றியிருந்தார். இதனால் இறக்குமதியாளர்கள் மட்டுமன்றி ஏற்றுமதியாளர்களும் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியுடன் அண்மையில் சந்திப்பு ஒன்றை நடத்த இறக்குமதியாளர்கள் முயற்சித்தபோதிலும் அது பலனளிக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# அம்பாந்தோட்டை கடலில் நேற்று நிலநடுக்கம்

கொழும்பு, ஏப். 25

அம்பாந்தோட்டை கடற்பகுதியில் நேற்று அதிகாலை 12.45 அளவில் 4.4 மக்னிடியூட் அளவில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது

ஹம்பந்தாட்டை பகுதியிலிருந்து 25.8 கிலோமீற்றர் தொலைவில் தென்மேற்கு கடலில் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாக புவிசரிதவியல் மற்றும் சுரங்க பணிகயத்தின் பணிப்பாளர் நாயகம் அஜித் பிரேம தெரிவித்தார்.

இதனால் நாட்டுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் ஆகியன தெரிவித்துள்ளன. (அ)

# கொழும்பில் பல இடங்களில் நேற்று மின்சாரம் தடைப்பட்டது!

கொழும்ப, ஏப். 25

மருதானை துணை மின்நிலைய மின் கம்பியில் ஏற்பட்ட கோளாறால் கொழும்பு 4, 5, 7, 8, 10, 12 மற்றும் புறநகர் பகுதிகள் பலவற்றில் நேற்று மாலை மின்சாரம் தடைப்பட்டது.

மருதானை துணை மின்நிலையத்தில் கேபிள் வெடித்ததால் மின் தடை ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

கொலன்னாவையில் உள்ள 132 கே.வி. துணை மின் நிலையத்திலும் கேபிள் வெடிப்பு ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், கொழும்பு 4, 5 மற்றும் 7 ஆகிய இடங்களில் சிறிது நேரத்திலேயே மீண்டும் மின்சாரம் வழங்கப்பட்டது. ஏனைய இடங்களில் பல மணி நேரம் மின்சாரம் தடைப்பட்டது. (ஐ)

# அதிக வெப்பத்தால் இருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 25

அனுராதபுரத்தில் அதிகமான வெப்பம் காரணமாக இரண்டு பேர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளனர் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எப்பாவல பகுதியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

புத்தாண்டு வைபவத்தில் கயிறு இழுக்கும் போட்டியில் கலந்து கொண்ட ஒருவர் வெப்பத்தை தணிக்க தலையில் குளிர்ந்த தண்ணீரை ஊற்றி கொண்டால், உயிரிழந்துள்ளார்.

மற்றைய நபர், வயலில் புல் வெட்ட சென்ற நிலையில், கடுமையான வெப்பத்தை தாங்க முடியாது குளித்ததால் உயிரிழந்துள்ளதாக எப்பாவல திடீர் மரண விசாரணை அதிகாரி தெரிவித்துள்ளார்.

பாலசியம்பலாவ பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதான ஏ.ஆர்.டி. அத்துல தம்மிக்க, கட்டியாவ பிரதேசத்தை சேர்ந்த 38 வயதான எல்.ஜீ.விஜேசிங்க ஆகியோரே சம்பவங்களில் உயிரிழந்துள்ளனர்.

நாட்டில் தற்போது நிலவும் கடும் வெப்பத்துடன் கூடிய காலநிலை காரணமாக வெப்ப அதிர்ச்சியால் திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் இவர்கள் உயிரிழந்துள்ளதாக எப்பாவல அரச வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி என்.எச். திஸாநாயக்க தெரிவித்தார். (அ)




# ஜேர்மனி செல்வோருக்காக யாழில் இலவச சட்ட ஆலோசனை நிறுவனம்!

யாழ்ப்பாணம், ஏப். 25

ஜேர்மனி நாட்டுக்கு செல்ல விரும்புவோர், குடியேற விரும்புவோருக்கான இலவச சட்ட ஆலோசனை நிறுவனம் யாழ்ப்பாணத்தில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

ஜேர்மனி நாட்டின் 40 வருட கால சட்டத்துறை அனுபவம் வாய்ந்த முட்பன் கோறன்பிளோ நிறுவனம் தெற்காசியாவுக்கான இரண்டாவது சட்ட ஆலோசனை நிறுவனத்தை யாழ்ப்பாணத்தில் திறந்துள்ளது.

யாழ்ப்பாணத்துக்கான பணிமனையை முட்பன் கோறன்பிளோ நிறுவனத்தின் சட்டத்தரணி கோறன் பிளோ திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் சட்டத்தரணி எம். டி. எஸ். இராமச்சந்திரனும் பங்கேற்றிருந்தார். (ஐ)

# ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

கொழும்பு, ஏப். 25

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி சிறியளவு வீழ்ச்சி கண்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்றைய நாணய மாற்று விகிதத்தை வெளியிட்டுள்ளது.

இதற்கமைய, நேற்று அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 313.33 ரூபாவாகவும், விற்பனை பெறுமதி 328.48 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

இதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 313.05 ரூபாவாகவும், விற்பனை பெறுமதி 328.51 ரூபாவாகவும் பதிவாகியிருந்தது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.04.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.